புதுவாழ்வு

ஆசிரியர். க. அன்பழகன், M.A.

புதுவாழ்வு

மாலை 1 | திருவள்ளுவர் ஆண்டு 1979 ஆனி 1 | மலர் 6

ஆசிரியர் : க. அன்பழகன் எம்.ஏ.,

துணை ஆசிரியர் : கே. ஜி. இராதாமணாளன்.

உள்ளுறை

தீர்ப்புக் கூறு	...	3
தூத்துக்குடி அறிவிப்பு	...	4
புலவருக்குப் பரிசு	...	13
தாவி எழு !	...	16
ஸ்தாபன ஐக்யம்	...	17
ஒன்றுபட்டிருந்தால்......!	...	24
பொற்சிலை	...	27
வானமண்டலம்	...	33
நந்த நடந்த மாலைக்காலம்	...	41
ஞான சௌந்தரி	...	45
உரைகள்	...	46

10, வேளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை - 7.

விலை அணா 4

15—ஜூன்
1948

மல்லிகை

(திங்கள் கதை இதழ்)

பல ஆண்டுகளாகச் சிறந்த பல நூல்களைத் தீட்டித் தமிழகத்திற்குத் தந்துள்ள

திரு. எஸ். எஸ். அருணகிரிநாதர் அவர்களை

ஆசிரியராகக் கொண்டு வெளிவருவது.

'மல்லிகை' முழுவதும் சுவைமிக்க கதைகளைக் கொண்டு மிளிரும்.

விவரங்கட்கு: நிர்வாகி,
மல்லிகை, 62 முல்லாசாகிப் தெரு,
தங்கசாலை—சென்னை.

புதுவாழ்வு

(மாத வெளியீடு)

விலை விவரம்:-

தனி இதழ் அணா 4.
ஆண்டுக் கட்டணம் ரூபா 3.

விளம்பர விகிதம்:-

அட்டை வெளிப்பக்கம்	ரூ. 120
,, உள்பக்கம்	,, 80
உள்பகுதி முழுப்பக்கம்	,, 60
,, அரைப்பக்கம்	,, 30
,, கால் பக்கம்	,, 20

தொடர்ந்து விளம்பரம் செய்ய விரும்புவோர் நேரில் எழுதுக.

விற்பனை இல்லாத ஊர்கட்கு முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

எல்லா ரயில்வே ஹிக்கின்பாதம்ஸ் புக்ஸ்டால்களிலும் 'புதுவாழ்வு' விற்கப்படும்.

மலேயா முழுமைக்கும்

திரு. ஏ. அங்கமுத்து,
தமிழ்நாடு புத்தக நிலையம்.
த. பெட்டி எண் 118,
6, ஈப்போ ரோடு,
கோலாலம்பூர், மலேயா.

என்பவர், விற்பனை உரிமையாளராக அமைந்துள்ளதால் மலேயா தோழர்கள் விற்பனைக்கு அவருக்கே எழுதவேண்டுகிறோம்.

விவரங்கட்கு:

நிர்வாகி, "புதுவாழ்வு"
10, வேளாளர் தெரு,
புரசபாக்கம், சென்னை-7.

தீர்ப்புக் கூறு

நாரா. நாச்சியப்பன்

★

தீர்ப்புக் கூறிடு தோழா—நீ
திராவிடர் ஆரியர் வேறின மென்றே
தீர்ப்புக் கூறிடு தோழா!

தனித்துண்டு வாழும் தீய வழக்கங்கள்
தமிழ் இனத் தவர்க்கு என்றுமில்லை யென்றே
தீர்ப்புக் கூறிடு தோழா!

மூக்கைத் தொட்டுப் பகைவர்கள் வீழ
முணகிடும் மந்திரம் நம்மவர்க் கில்லை
நாக்கில் வடமொழி தாண்டவ மாடிட
நச்சிடும் வஞ்சகர் வேறின மென்றே
தீர்ப்புக் கூறிடு தோழா!

நெற்றி வியர்வை நிலத்தினில் பொழிய
நித்தமும் உழைப்பவர் பொருளெல்லாம் நாளும்
எற்றிப் பிழைத்திடும் எத்தர்கள் கும்பல்
எங்கள் நல்லினப் பகைவர்கள் என்றே
தீர்ப்புக் கூறிடு தோழா!

நல்ல அறிவைக் கெடுத்திந்த நாட்டில்
நால்வகை வருணங்கள் நாட்டிநிற் பவரை,
அல்ல நம்மினம் அல்லவே என்றும்
ஆரியர் திராவிடர் வேறின மென்றும்
தீர்ப்புக் கூறிடு தோழா!

தூத்துக்குடி அறிவிப்பு

சென்ற திங்களில் தூத்துக்குடியில் கூடிய திராவிடக் கழக மாகாண மாநாடு சீரும் சிறப்புமாக நடைபெற்றதை, தேசியத்தின் மறைவில் ஜாதியம் வளர்க்கும் பார்ப்பன ஏடுகள், எவ்வளவுதான் இருட்டடைப்புச் செய்த போதிலும், நாட்டு மக்கள் நன்கறிவர்.

அங்கே கூடிய மக்களே ஒரு பெருங்கடல். அவர்களது உடையே கடலினது கருநிறம். அவர்களது உள்ளத்தில் மோதிய எழுச்சியே கிளர்ந்தெழும் அலைகள் அவர்களது வாழ்த்து முழக்கமே அடங்காத அலை ஓசை. அவர்களிடையே உலவிய தலைவர்களே கடலினிலே மிதக்கும் கலங்கள். அவர்களது உள்ளங்கலந்த தலைவர் பெரியாரே—கலங்கரை விளக்கம். இத்தரு பெருமையைத் தூத்துக்குடி அடைந்த போது தமிழகமே தலை நிமிர்ந்து நோக்கிற்று. வீறுகொள் இளைஞர்களும் மாண்புகொள் மாதர்களும், கிழவரும் சிறுருமெனக் கூடி நின்றோர், வெள்ளம் போல் தமிழர் கூட்டம் என்ற வர்ணனையையும் கடந்தனர். பழைய புகழைத் திரும்பப் பெற்று, புகார், கொற்கை, வஞ்சி ஆகிய துறைமுகங்கள் ஒன்றுகூடிக் கப்பலோட்டிய தமிழர் வ. உ. சியின் கனவை நினைவாக்கியதைப் போல்—தூத்துக்குடி தந்த இன்பக் காட்சி திராவிடத்தையே மலரச்செய்தது.

ஆம்; அத்தகைய மாநாட்டிற்குத்தான் எவ்வளவு மறைமுக எதிர்ப்புக்கள், தடைப்படுத்த எவ்வளவு சிபார்சுகள், கலகம் விளைவிக்க எவ்வளவு சூழ்ச்சிகள், கருப்பு உடையை கழற்றச் செய்ய எவ்வளவு மிரட்டல்கள், போக்கு வரத்திலே ரயில்வே நிர்வாகத்தினரால் எவ்வளவு தொல்லைகள் அவ்வளவையும் இலட்சியம் செய்யாமல், எந்தக் கலகத்திற்கும் இடந்தராமல், அமைதியாகவும் ஒழுங்காகவும் இந்த மாநாட்டினை நடத்தித் தந்த திராவிடக் கழகத்தாரையும், சிறப்பாக வரவேற்புக் குழுவினரையும், நாட்டு நலத்தில் பற்றுடைய எக்கட்சியினரும் பாராட்டாமலிருக்க முடியாது.

அம்மாநாட்டில் ஒரு லட்சம் மக்களுக்கு மேல் ஒன்று கூடி, ஒரு மனதாக நிறைவேற்றியுள்ள தீர்மானங்களை நாட்டு மக்கள் யாவரும் அறிந்துகொள்ளும் வாய்ப்பில்லை—அவ்வாய்ப்பினை அளிக்க வேண்டிய தேசியத்தாள்கள் யாவும் ஆரியத்தின் ஆதிக்கத்தால் பார்ப்பனியத்தின் கையேடாக

வும் விளம்பர ஸ்தாபனமாக வுமே அமைந்துள்ள காரணத்தால். மைலாப்பூரிலோ மாம்பலத்திலோ ஏதேனும் ஒரு சிறு மண்டபத்திலே ஒரு நூறு பார்ப்பனர்களுக்கும் குறைவாகவே கூடி, தங்களுடைய சுயநலவாழ்வு கெடாமலும், சூழ்ச்சிகள் வெளிப்படாமலும் தங்கள் ஆதிக்கம் குன்றுமலும் குறையாமலும் இருக்க வேண்டும் என்பதற்காகச் செய்யும் தீர்மானங்களைக் கொட்டை எழுத்தில் தலைப்புக் கட்டி, பத்தி பத்தியாக வெளியிடத் தவருத பார்ப்பனப் பத்திரிகாசிரியர்கள், இந் நாட்டின் உரிமையாளர்களான திராவிட மக்களின் எழுச்சிக்கு எடுத்துக்காட்டான தீர்மானங்களை மறைத்து விட்டார்கள்.

இருட்டடைப்புச் செய்து விட்டதாக இறுமாந்துள்ள அவ்வாசிரியர்களின் அடிப்படை அறிவிலேயே ஐயம் ஏற்படுகிறது, அவர்களுடைய நடவடிக்கையைக் கவனித்தால். அறிவொளி பரவுவதை வேண்டுமானல் பத்திரிகைகள் ஓரளவு தடுக்கலாம், அறிவுக்கே துரோகம் செய்வது மூலமாக. ஒளியைத் தாள் கொண்டு மறைப்பதுபோல் புரட்சித் தீ பரவுகிறபோது அதைத் தாள் கொண்டு மறைப்பது அறியாமையின் அடையாளம். அத்தாள் மறைக்க மறைக்க அதிலேயே புரட்சித் தீ பாய்ந்து அதன் மூலமாகவே மேலும் மேலும் அத்தீ பரவும்.

புரட்சித் தீப்பொறிகளாகிய தூத்துக்குடித் தீர்மானங்களை, ஸ்வீடன் தாளில், அமெரிக்கன் அச்சுப் பொறியில், ஆரிய ஆசிரியர்களின் எழுதுகோலினுல் தீட்டப்பட்ட, வடவர்களின் தேசியப் பிரசாரத்தைத் தாங்கிவரும் ஏடுகளைக் கொண்டு மூடிவிடக் கருதும் இம்மேதாவிகளிடம், நெருப்பை எடுத்து மடியிலே கட்டிக்கொண்டு அணைத்துவிடக் கருதும் அறிவாளிகளும் தோற்று விடுவார்கள். ஒருவரை ஒருவர் விளங்கிக் கொள்ளாமலே இருந்து உண்மையைத் தெரிந்து கொள்ளாமல், கண்மூடித்தனமாக ஒருவரை ஒருவர் வெறுக்கமட்டுமே பழகி அமைதி குலைந்து குழப்பம், கலகம் ஏற்பட்டுத் தென்னுடே — திராவிடமே — சீரழியவேண்டும் என்று திட்டமிட்டுத்தான் இவ்விதம் நடந்து கொள்கிருர்களோ என்று ஐயப்படவும் இடமிருக்கிறது. காட்டிலே உள்ள விலங்குகள் யாவும் கட்சிப்பிரிந்து போரிடத் தொடங்கினுல், சொட்டு இரத்தம் முழுவதும் நரிக்குத் கிறதானே? அதைப்போலவே தென்னுட்டாரும் திராவிட இனத்தாருமாகிய இந் நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள முடியாத நிலையில் கலக உணர்ச்சி ஏற்பட்டால் பத்திரிகைகளும் அதிகம் செலவாகும், பார்ப்பனீயமும் கொழுக்கலாமல்லவா? ஆனுலும் உண்மை வெளிப்படும் போது, பார்ப்பனீயம் அடியோடு ஒழிக்கப்படும் என்பதை அவர்கள் ஏனே மறந்துவிடுகிருர்கள்?

பொதுமக்களோ, பிற பத்திரிகைகளில் வெளிவராத காரணத்தாலேயே, திராவிடக் கழக தீர்மானங்களை அலட்சியப்படுத்தி விடுவதோ, கவனிக்க மறுப்பதோ, நாட்டிற்கு நல்லதல்ல. அரசியலாரும் நமக்கென்ன என்று இருப்பதோ, நாம் ஆளுபவர்கள் எனவே அவர்கள் அடங்கத்தானே வேண்டும் என்று கருதுவதோ, அறிவுடைமையாகாது. எனவேதான் பொதுமக்களும் அரசியலாரும் 'தூத்துக்குடி அறிவிப்பைக்' குறித்துச் சிந்திக்க வேண்டுகிறோம்.

அரசியல் நோக்கம்

"திராவிடக் கழகம்—சமுதாய இழிவுகளை நீக்கும் ஒரு பிரச்சார இயக்கமேயன்றி—பதவி வெறிகொண்டு, 'தேர்தலுக்கு நின்று, அரசியலைக் கைப்பற்ற' நினைக்கும் பிற கட்சிகளைப்போல் ஒரு கட்சி ஸ்தாபனம் அல்ல" வென்று பெரியாரவர்கள் கூறியுள்ளபோதிலும், அதற்கு அரசியல் இலட்சியம் இல்லாமலில்லை என்பது—"திராவிட நாட்டைத் தனிச் சுதந்திர நாடாக்குவதே திராவிட மக்களின் முடிவான அரசியல் கோரிக்கை" என்ற தீர்மானத்தால் வலியுறுத்தப் படுகின்றது. மேலும் "மிகக் குறைந்த விகிதாசாரத்தினரால் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள டில்லியில் கூடும் இந்திய அரசியல் நிர்ணய சபை, திராவிட மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றதல்லவென்றும்—அதன் முடிவுகள் திராவிட மக்களை எவ்வகையிலும் கட்டுப்படுத்தா" என்றும் தீர்மானிக்கப் பட்டுள்ளதும் திராவிட மக்களின் அரசியல் உரிமைக்கு அரண் செய்வதாகும்.

நடைமுறைத் திட்டங்கள்

"திராவிடக் கழகத்தின், திருச்சி மாகாண மாநாட்டில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தவைகள் போக ஏனைய திட்டங்களை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும்" என்றும்; "திராவிட கழக வேலைத் திட்டமாக ஏற்கனவே ஒப்புக்கொள்ளப் பட்டு தீர்மானித்து வரும், ஜஸ்டிஸ் கட்சி வேலைத் திட்டத்தைத் தற்கால நிலைமைக்கேற்ப மாற்றியமைத்துக் கொள்ளும் உரிமையுடன் இம் மாநாடு ஒப்புக் கொள்கிறது" என்றும்; "தமிழ் நாடு தவிர்த்த இதர, ஆந்திர, கேரள கன்னடிய நாட்டுப் பகுதிகளில் பிரச்சாரம் துவக்கப்படுவதை அடுத்த முக்கியத் திட்டமாகக் கொள்ள வேண்டும்" என்றும்; "திருவிதாங்கூர், மலபார், கொச்சி ஆகிய பகுதிகளில்—பிரச்சாரம் செய்ய உடனடியாகப் பிரச்சாரக் குழு ஒன்றை நிறுவி நடைமுறை வேலைகளைத் தொடங்க வேண்டும்" என்றும், இம் மாநாடு தீர்மானித்துள்ளவற்றை விரைவில் செயல்முறையில் கொண்டுவர கழகத் தோழர்கள் முயற்சிக்க வேண்டும்.

கருஞ் சட்டைப் படை

"தி. க. த்தில்—கருஞ்சட்டைப் படை என்ற ஒரு தனி ஸ்தாபனம் இல்லையென்றும், இருப்பதாகக் கருதி அரசாங்கத்தார் தடை விதித்திருப்பது தவறான எண்ணத்தை உண்டு செய்வதால் அரசாங்கத்தார் உடனே தடையை நீக்க வேண்டும்" என்றும் மாநாடு வற்புறுத்தியுள்ளது. அரசாங்கத்தார், கருஞ்சட்டைப் படை இருப்பதாகக் கண்ட கனவினால், ஏற்பட்ட பயத்தால்

தி. க. த்திற்கு எவ்வளவுபெரிய தவறிழைத்துள்ளார்கள் என்பதை எண்ணிப் பார்த்து மேலும் காலந் தள்ளாமல் தடையை நீக்க முன் வரவேண்டும்.

மேலும் தி. க. த்தின் நடைமுறைகளைக் குறித்த தீர்மானங்களில் ஒன்ருகக் 'கழக நிர்வாக உறுப்பினர்கள், கழகப் பணிகளில் ஈடுபடும் போதும், பிரசாரகர்களும் பிறரும் மேடையில் பேச வேரும்போதும், கருப்புச் சட்டை அணிந்திருக்க வேண்டும்'' என்று நிறைவேறிய தீர்மானமும்—கருப்புச் சட்டைப் படை என்ருெரு ஸ்தாபனமில்லை என்பதை மேலும் வலியுறுத்துவதாகும்.

வகுப்பு உரிமைகள்

இன்றுள்ள நிலையில் பிற்பட்ட வகுப்பினர்கள் தமது நியாயமான உரிமைகளை இன்னும் அடையாததால், "சாதிகள் என்பவையே இந்நாட்டிலிருந்து ஒழிக்கப்படும் வரை சாதி வாரிப் பிரதிநிதித்துவ முறை அரசாங்க அலுவல்களில் நிரந்தரமாக இருந்து வரவேண்டும்'' எனவும், சென்னை மாகாணம் சம்மந்தப்பட்டவரையில் இந்திய யூனியன் அரசாங்கமும் சென்னை மாகாண சாதிவாரிப் பிரதிநிதித்துவ முறைச் சட்டத்தை, தந்தி, தபால், ரயில்வே, கலால், (அகில இந்திய) ரேடியோ முதலிய அகில இந்திய அலுவல்களில் கையாள வேண்டுமென வற்புறுத்துகிறது'' எனவும் தீர்மானித்துள்ளது மிகவும் முக்கியமானதாகும். இதே நாட்களில்தான் இந்திய யூனியன் அரசாங்கம் மத்திய அலுவல்களில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ முறையை நீக்கி விட்டதாக அறிவித்துள்ளதோடு, மாகாண சர்க்காரையும் இந்த முறையை நீக்கச் செய்ய முயற்சிப்பதாகத் தெரிகிறது. இதை ஆணவச் செயல் என்று கருதுவதைத் தவிர்த்து— அறிவுள்ள செயல் என்று எண்ணுவதற்கில்லை. யானை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே என்பது போல் ஆச்சாரியார் கவர்னர் ஜெனரல் ஆகப்போகிருர் என்ற உடனேயே இந்நிலை யெனில், ஆனபின் என்னென்ன நடக்குமோ நாமறியோம்.

ஆளவந்தார் - பிற் படுத்தப் பட்டவர்களின் அடிப் படை உரிமைகளிலேயே கைவைப்பது எவ்வளவு பெரிய அநீதி என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இதைக் குறித்துத் திராவிடர் கழகம் செய்துள்ள தீர்மானத்தை அரசியலார் புரிந்து கொள்ள வில்லையாயின் பொது மக்கள் புரியச் செய்ய வேண்டுமென்று ஆசைப்படுகிறேம்.

மேலும், "அரசாங்க மின்சார இலாகாவில் மிக அதிகப்படியாகப் பார்ப்பனர்களே பதவி வகிப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டித்திருக்கிறது'' என்பதையும் அரசாங்கம் கவனத்திலிருத்த வேண்டும்.

"சமுதாய அமைப்பு முறையில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இவ்வ நிலைத்துள்ள தீவறுகளால் மேல் சாதி மக்களே படிப்பறிவுடைய மக்களாக ஆகவும், 100க்குத் 90பேர்களான, கீழ் சாதி மக்களாக வாழும் திராவிடர்களோ படிப்பறிவற்றவர்களாகவும் இருக்க நேர்ந்துள்ளதால் இந்த அநீதி ஒழிய எல்லாக் கல்வி நிலையங்களிலும், கல்லூரிகளிலும், வகுப்பு விகிதாசாரத்தின்படியே மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள

வேண்டுமென்றும், இம்முறையை ஏற்காவிடில், 'எல்லோர்க்கும் சம சந்தர்ப்பம்' என்ற கொள்கையே அழிக்கப்பட்டதாகும்,'' என்றும் இம்மாநாடு தீர்மானித்திருப்பதானது-கல்வித் துறையில் உடனடியாகச் செயலில்-நிறைவேற்றப்பட வேண்டியதாகும். வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைத் தவிர்த்து, திராவிட இனத்தார் கல்வி அறிவு பெற்று முன்னேற வேறுவழியில்லை என்பதையும் இது தெளிவாக்குகின்றது.

கல்வி நிலை

"திராவிடத்திற்கு நேர்முரணான பேச்சு வழக்கற்ற வடமொழியைத் திராவிட நாட்டுப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்கப் பார்ப்பனத் தலைவர்கள் செய்துவரும் முயற்சியை வன்மையாகக் கண்டிப்பதோடு அரசாங்கம் இதை அனுமதிக்கக் கூடாது" என்று தீர்மானித்திருப்பது, இந்நாட்டில் ஆரிய மொழிக்கு ஆதிக்கந்தேட அச்சிறு கூட்டம் கட்டுப்பாடாக நடத்திவரும் சூழ்ச்சியினை மண்டையில் அடித்ததாகும்.

"நாட்டில் மதச்சார்பற்ற ஆட்சி நிலவ வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டு விட்டதால் கல்வி நிலையங்களிலும் மதசம்பந்தமான பாடங்கள், புராணக் கதைகள் கற்பிக்கக் கூடாதெனவும் அரசாங்கம் உயர்நிலைக் கல்விக்காக, பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும், பொருளுதவி செய்யக் கூடாதென்றும், கட்டாய இலவசத் தொடக்கப் படிப்புக்கும், செகண்டரி (நடுநிலை) படிப்பிற்குமே, பணமுழுதும் உதவியாக அளிக்க வேண்டுமென்றும்" தீர்மானித்திருப்பது, பாமர மக்களின் நிலையையும், அறியாமையின் கொடுமையையும் உணர்ந்து, அரசாங்கம் கையாளக் கூடிய வழிமுறையைக் காட்டுவதாகும்.

இந்தி நுழைவு

"இந்தி மொழியைத்-திராவிட நாட்டில் எந்த அளவிலும் உபயோகப் படுத்தக்கூடாதென்று" இம்மாநாடு தீர்மானித்துள்ளது. இந்துஸ்தானியோ தமிழ் நாட்டில் மட்டும் மாணவர்களின் விருப்பப் பாடமேயன்றி கட்டாயமல்ல என்று கூறப்பட்டபோதிலும், இந்தியாவின் பொதுமொழி, ஆளவந்தார்களின் சொந்த மொழி என்ற காரணங்களால் நாளடைவில் ஆதிக்கம் செலுத்தத் தவறப் போவதில்லை. அந்நிலையில், தங்களுடைய தாய்மொழிப்பற்று, தங்களுடைய வாழ்க்கை உயர்வுக்குப் பயன்படாதபடி இந்துஸ்தானி ஆதிக்கம் செலுத்துவதை உணரும் மக்கள், விரும்பாவிட்டால்கூட இந்துஸ்தானியை விருப்ப மொழியாகப் பயிலத் தொடங்குவார்கள்.

இந்துஸ்தானியை நாட்டின் பொது மொழியாக ஒத்துக்கொண்டுவிட்டு, பிள்ளைகளுக்குத்தான் கட்டாயமில்லையே என்று பேசுவது, தந்தை மகனைப் பார்த்து, "நான் சொல்லுகிற பெண்ணை நீ மணந்து கொள்ள வேண்டும் என்பது கட்டாயமல்ல. விரும்பினால் செய்துகொள், ஆனால் அப்பெண்ணை நீ மணக்காவிடில் என்னுடைய சொத்துக்கும் உனக்கும் சம்பந்தமில்லை என்பதை மட்டும் மறக்க வேண்டாம்" என்று கூறுவதை ஒக்கும்.

எனவேதான், இந்துஸ்தானியை இந்நாட்டின் எந்தப் பகுதியிலும் எந்த வகையிலும் நுழையாமற் செய்வது அவசியமாகிறது. திராவிட நாட்டவரில், சிறப்பாகத் தமிழ் நாட்டவர், இந்துஸ்தானி நுழைக்கப்படுவதை அடியோடு வெறுக்கின்றனர் என்பதைக் கல்வி அமைச்சர் உணராமலிருக்க முடியாது. அவர் தனது நெஞ்சிலே கை வைத்துப் பார்த்தாலே தெரியும், தனது தந்திரங்கூடப் பலிக்காது போல் இருக்கிறதே என்ற எண்ணத்தால் ஏற்படும் படபடப்பு அளிக்கும் பதில்.

மறுபடியும் வேதாளம் முருக்கமரம் ஏறிக்கொண்டதைப் போன்று, பார்ப்பனர் பேச்சைக் கேட்டோ, சூழ்ச்சிக்கு அஞ்சியோ, சாகசத்தில் சாய்ந்தோ நம் நாட்டு வரிப்பணம் பாழாகும் வகையில் இந்துஸ்தானியைப் புகுத்தி, அதனை எதிர்க்க வேண்டிய அவசியத்தை இந்நாட்டு மறத்தமிழருக்கு ஏற்படுத்தி, வீண் தொல்லையை வளர்த்துக் கொள்ள வேண்டாமென அரசாங்கத்தாரை எச்சரிக்கிறோம்.

மேலும், "ஜனநாயகம் (மக்கள் ஆட்சி) உண்மையாக வேண்டுமானால், ஓட்டளிக்கும் தகுதியுடைய எல்லா மக்களுமே படித்திருக்க வேண்டுமாதலால், திராவிட நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் கட்டாயத் தொடக்கக் கல்வி அளிப்பதற்கான நடவடிக்கைகளை, உடனே மாகாண அரசாங்கமும் மத்திய அரசாங்கமும் எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று தீர்மானித்திருப்பதன் அவசியத்தைப் பொதுமக்கள் நன்குணர்வார்கள். திராவிட நாட்டு மக்களின் கல்வி நலன் குறித்து மத்திய அரசாங்கம் கவனிக்குமென்று எதிர்பார்க்காவிட்டாலும், நம்முடைய மாகாண அரசாங்கமாவது கவனிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறாகாது. பாமர ஏழை மக்களின், உழவர்களின் அறியாமை நிலையை நன்குணரும் வாய்ப்புப் பெற்ற, ஓமாந்தூர் இராமசாமி அவர்களே இதைக் கவனிக்காவிடில், அதைவிட வருந்தத்தக்கது வேறொன்றுமில்லை.

மதம்

"இந்திய யூனியன் ஆட்சி மத சம்பந்தமற்றது என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னரும் மத விழாக்களுக்கு விடுமுறையளிப்பது, மத நிலைய பரிபாலனத்திற்கென ஒரு தனிக் குழு ஏற்படுத்தியிருப்பது, மத நிலையங்களுக்குப் பண உதவி செய்வது, அவற்றின் சொத்துக்களுக்குச் சலுகைகள் அளிப்பது, அவற்றின் பேரால் உள்ள பெருவாரியான சொத்துக்களைப் பொது மக்களுக்குப் பலனில்லாமல் பாழாக அனுமதிப்பது ஆகிய செயல்கள் நடைபெறாதிருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டுமாய் அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொண்டிருப்பது"

எவ்வளவு அவசியம் என்பது—பகுத்தறிகின்றவர்களுக்கு விளங்காமற் போகாது. இன்றைய ஆட்சியினர் அவ்வளவு துணிவு கொள்ளும் அளவிற்குத் தெளிவு பெற்றவர்களல்லவென்றாலும், விரைவில் இவைகள் நடைபெறாமற் போகாது என்பதை நினைவுப் படுத்த விரும்புகிறோம்.

"இனாம் ஒழிப்புச் சட்டத்தை விரைவில் நிறைவேற்றி, சிறிதாவி

னும், பெரிதாயினும், மத சம்பந்தமானதாயினும் இல்லையாயினும், எல்லா ஜமீன்களையும் ஒரேயடியாக ஒழித்துக்கட்ட வேண்டுமென—இம் மாநாடு சென்னை அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொண்டுள்ளது'' என்ற தீர்மானம் ஜமீன் ஒழிப்புக்கு நாட்டில் எவ்வளவு ஆதரவு இருக்கிறது என்பதை மட்டுமன்றி நஷ்ட ஈடு கொடுப்பதென்பது எவ்வளவு பெரிய அநீதி என்பதையும், காட்டுவதாகும். ஜமீன் ஒழிப்பைக் குறித்துத் தமிழ் நாட்டில் எவ்வித எதிர்ப்பும் இல்லாமையினாலேயே அதைக் குறித்துத் தீர்மானம் செய்யும் அவசியம் தோன்றவில்லையே தவிர்த்து, ஜமீன் ஒழிப்பும் கழகத்தின் இலட்சியத்தில் ஒன்றேயாகும்.

சமூகம்

''இந்திய ரயில்வே நிலையங்களிலுள்ள எல்லா (மரக்கறி) உணவுச் சாலைகளும், சிற்றுண்டி விடுதிகளும், ஒரு சாதியாரைக் கொண்டே நடைபெறுவதைக் கண்டிப்பதோடு, மரக்கறி, மாமிச உணவு என்ற உணவுப் பாகுபாட்டை மட்டுமே கொண்டு எல்லோரும் ஏற்று நடத்தும் முறை கைக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதற்காக உள்ள அலுவலகத்தில் எல்லா சாதியாரும் நியமிக்கப்படவேண்டும் என்றும் இம் மாநாடு அரசியலாரைக் கேட்டுக் கொண்டுள்ளது. சாதி மதவெறி ஒழிப்புக்கு இது துணையாகும் என்பதை உணர்ந்து அரசியலார் நிறைவேற்ற முன்வர வேண்டும்.

''ஆதித் திராவிட மக்கள்—தங்களது இழிவுக்குக் காரணமான அடிமைத் தொழில்களை வெறுத்து ஒதுக்கிக் கொண்டு வருவதைக் கண்டு வெறுப்புக் கொண்ட கிராமவாசிகளால்—பல கிராமங்களில்—பெருங் கொடுமைகள் இழைக்கப்பட்டு, துன்பப்படுத்தப்பட்டு வருவதால் இவ்விதம் நடை பெறும லிருக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டு'' மென்று கேட்டுக் கொண்டுள்ளது. உடனே கவனிக்கப்பட வேண்டியதாகும். ஆதித்திராவிடர்க்கென ஒரு அமைச்சர் இருக்கிறார் என்றாலும், அவருக்கு இதைவிட வேறு என்ன முக்கிய அலுவல் இருக்கிறதோ நாமறியோம்? பரம்பரையாக அடிமைப்பட்டுக் கொடுமைப்படுதசப்பட்டு வந்துள்ளவர்கள் எளிதிலே உரிமை பெற சம்மதிப்பார்களா உயர் சாதியினர். எனவேதான் அரசாங்கம் (கடுமையான நடவடிக்கை மூலம்) இதற்கான பரிகாரம் தேடவேண்டும்.

சர்க்கார் நடத்த

சர்க்கார் எதற்கெடுத்தாலும் வருமானம இல்லை என்று கைவிரிக்கும் தன்மை நீங்க, ''சர்க்காருக்குத் தக்க வருமானமும், மக்களுககு நல்ல உணவும் கிடைக்குமாதலால் மாகாணத்திலுள்ள எல்லா உணவு, சிற்றுண்டி விடுதிகளையும் சர்க்காரே ஏற்று நடத்த முன்வர வேண்டும்'' என்றும்—''பொதுமக்களின் தேவைக்கு இன்றியமையாத சாதனங்களான மின்சாரம், சுரங்கம், போக்குவரத்து முதலியவற்றைச் சர்க்காரே ஏற்று நடத்தவேண்டும் என்றும் தீர்மானித்திருப்பதை சர்க்கார் உடனடியாக ஆலோசித்து நிறைவேற்ற முற்பட வேண்டும்.

கூட்டுறவுப் பண்டகசாலைகள்

'கிராமங்களில் தனி நபர்கள் மக்களின் இன்றியமையாத அன்றாடத் தேவைப் பொருள்களை வியாபாரம் செய்வதைத் தடுத்து, கூட்டுறவுப் பண்டக சாலை மூலம் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும், நகரங்களிலும் கூட்டுறவுப் பண்டகசாலைகள் பெருகச் செய்யவேண்டு' மென்றும் தீர்மானித்திருப்பது சர்க்கார் கவனத்திற்கு உரியது மட்டுமன்றி — பொதுமக்கள் ஆங்காங்கே உடனடியாக நிறைவேற்றவேண்டியதாகும்.

உணவு

'விவசாயத் தொழிலுக்கும் சிறப்பாக நெற் பயிர் சாகுபடிக்கும் மின்சார வசதி அதிகப்படியாகப் பயன்படும்படிச் செய்யவேண்டும்'' என்றும், ''உணவுப் பண்டம் அல்லாதவற்றைப் பயிர் செய்வதை அரசியலார் தடுக்கவேண்டுவ துடன், அவசியமாயின் ஓரளவுக்கு மட்டும் அனுமதி தரவேண்டும்'' என்றும் தீர்மானித்திருப்பதை உணவு நெருக்கடி ஒரு சிறிதும் குறையாத இன்றைய நிலையில் —உடனடியாக அரசாங்கம் நடை முறைக்குக் கொண்டு வரவேண்டும்.

தொழிலாளர் நிலை

"தென்னிந்திய ரயில்வே தொழிலாளர்கள் இதர ரயில்வே தொழிலாளர்களைவிட மிகக் குறைந்த சம்பள விகிதங்களைப் பெற்றுவருவதால், இதர ரயில்வே தொழிலாளர்களின் நிலைக்கு உயர்த்தி, புதிய சம்பளவிகிதம் அளிப்பதோடு, சம்பளக் கமிஷனின் முடிவுகளையும் நடைமுறையில் கொண்டுவர வேண்டும் என்று மத்திய அரசியலாரைக் கேட்டுக் கொண்டுள்ளது'' மிகவும் முக்கியமானது என்பது—தென்இந்திய ரயில்வே தொழிலாளர்கள் பல நாட்கள் நடத்திய வேலை நிறுத்தத்திலிருந்தே தெளிவாகும்.

"எல்லாத் தொழிற்சாலைகளிலும், தொழிலாளர்கள் பணம் செலுத்தாமலே மூலதனத்தில் 5–ல் ஒரு பாகம் கட்டாயமாக ஒதுக்கப்பட வேண்டுவதுடன், தொழிற்சாலைத் தகராறுகளைத் தொழிலாளர் பிரதிநிதி ஒருவரும், முதலாளிப் பிரதிநிதி ஒருவரும் இருவராலும் தேர்ந்தெடுக்கப் பட்டஒருவரும் ஆகிய மூவரடங்கிய ஒரு குழுவைக் கொண்டே தீர்க்க வேண்டும்'' என்று சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருப்பதும் தொழிலாளர் நலனுக்கு மிகவும் அவசியமாகிறது அரசாங்கமே முதலாளிகளின் அரசாங்கமானபின் தொழிலாளிகட்கு நியாயங் கிடைக்க வேறு வழியேது? தொழிலாளருக்கும் மூலதனத்தில் பங்கிருப்பின் காரணமின்றி வேலை நிறுத்தமும் நடைபெறாது,மக்களுக்குத் தேவையான பொருள்களுக்கும் முட்டுப்பாடு ஏற்படாதன்றோ? அனாவசியமாக அரசாங்கத்திற்கும் கெட்ட பெயர் ஏற்படவும் சந்தர்ப்பம் ஏற்படாமல் இருக்கும் என்பதையேனும் எண்ணி, அரசாங்கம் இதனை நிறைவேற்ற முற்படட்டும்.

சமதர்மம்

"இந்நாட்டில் சமதர்மத்தைத் தோற்றுவிப்பதற்கு முதற்படியாக ஒவ்வொருவரும் தமக்கே சொந்தமாக, அதிகமாக இந்த அளவுக்குத் தான் நிலங்கள், வீடுகள், பணம் முதலிய சொத்துக்கள் வைத்துக் கொள்ளலாம் என்று நிர்ணயம் செய்வதுடன், பெரிய உத்தி'

யோகஸ்தரின் உயர்ந்த அளவு சம்பளத்தைக் குறைத்து, தொழிலாளரின் குறைந்த அளவு சம்பளத்தை உயர்த்தவேண்டும் என்றும் இம்மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது. இன்றைய அரசாங்கம் தனது கடமையை மறந்து விட்டதோடு மறைக்கவும் முற்பட்டுள்ளது. பொதுமக்கள், அவ்வுண்மையை நினைப்பூட்டும் நாள் வெகு தொலைவிலில்லை. 'கடமையை மறந்தோர் கைவிடப்படுவர்' என்பது அரசியல் அறிவு பெற்ற மக்கள் வாழும் நாடுகளில் வழங்கும் புதுமொழி. நம் நாடும் அப்புதுமொழியைப் பயின்றால்தான் நாட்டாட்சி நன்மைதரும்.

தூத்துக்குடி மாநாட்டில் மற்றும் சில தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டுள்ளன. அவற்றைக் குறித்துப் பொது மக்கள் சிந்திக்க வேண்டும். அரசாங்கத்தார் ஆலோசித்து, ஏற்று நடத்த முன்வர வேண்டும். திராவிடக் கழகத்தாராகிய நாம் நமது தீர்மானங்களிற் சிலவாயினும் வெற்றி பெற்று நடைமுறையில் வர முழுமுயற்சியும் எடுத்துக் கொள்ளவேண்டும். கழகத்தின் கடமை பெரிது. அதற்கு வகைப்படுத்தி முறைப் படுத்தப்பட்ட முயற்சியும் பணியும் தேவை. முயன்றால் வெற்றி நிச்சயம்.

இராமாயணத்தின் இனவெறி!

"இராமாயணம் என்பது இராமன், சீதை, இலங்கை அரசனை இராவணன் இவர்களைப் பற்றிய கதையாகும். தென்னிந்தியாவில் வானரர்களின் தலைவனான அநுமான் இராமனுக்கு உதவி செய்ததாக இராமாயணம் கூறுகிறது. ஆதியில் ஆரியர் தென்னாட்டின் மீது படையெடுத்த போது, திராவிடர்களுக்கும ஆரியர்களுக்கும் நடந்த போரைப் பற்றிக் கூறுவதே இராமாயணம் என்று சொல்லலாம். திராவிடர்களில் ஒரு வகுப்பாரையே 'வானரர்கள்' என்றும் இராமாயணத்தில் கூறியுள்ளனர்."

—பண்டித ஜவகர்.

புலவருக்குப் பரிசு!

நமது சென்னை மாகாண அரசாங்கத்தார்—தமிழ் நாட்டுப் புலவர் பெருமக்கட்குத் தம்மாலான கவுரவ மளிக்கத் தவறுவதே இல்லை. கவிஞருக்குப் பொன்னுடையா, புலவருக்குப் பரிசா, தமிழாசிரியருக்குச் சம்பளமா, எது வேண்டுமானாலும் அவரவர்கள் கேட்காமலே, அக் குறிப்பு வெளிப்படு முன்பே, அளித்துவரும் பெருமையை என்னென்று போற்றுவதென்றே தெரியவில்லை. இந்த அமைச்சர் குழுவும், அதிலுள்ள கல்வி அமைச்சரும் எவ்வளவு பெரிய அறிவாளிகளாகவும், திறமைசாலிகளாகவும் இருக்க வேண்டும் என்பதை அவர்களது பேருபகாரப் பண்பிலிருந்தே தெரிந்துகொள்ளலாம்.

தமிழகத்தில் கம்பருக்குப் பின் எட்டு நூற்றாண்டுகளாகியும் அவரைப் போல் ஒரு கவிஞர் தோன்றவில்லை என்று எண்ணி வருந்திக் கொண்டிருந்தவர்களின் துயரம் தீர, இந்தக் காலத்தில் ஒரு காப்பியம் இயற்றித் தந்த ஒரு பெரும் புலவருக்கு நமது அரசாங்கம் பரிசளித்துள்ளது.

நான் ஏடெழுதி வெளியிட்டு இரண்டாண்டாயிற்று, இன்னும் அதனை அறியாது, அறிந்தும் படிக்காத மக்களும் உள்ளனரே என்றெண்ணி வருந்திய புலவரைப் பார்த்து அதனை நாடறியச் செய்யும் பணியும் நாங்கள் எடுத்துக் கொள்கிறோம் என்று அரசாங்கம் தெரிவித்து விட்டது.

நான் எழுதியது புத்துலகம் பூக்க புரட்சி மனப்பான்மை தோன்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு. ஆனால் படித்தவர்கள் கூட புரட்சிக்குத் தயாராகவில்லையே என்று ஏங்கிய அப் புலவருக்குப் "புரட்சி உணர்ச்சி தானே, அதற்கு நாங்கள் வித்திடுகிறோம்" என்று அரசாங்கம் உறுதி தந்துவிட்டது.

"காப்பியத்தை எழுதி முடித்துவிட்டோம், அரசாங்கம் இதை எப்போ கவனிக்கப் போகிறது" என்று கவலைப்பட்ட புலவருக்கு, "இதோ நாம கவுரவமளிக்கிறோம" என்று அரசாங்கம் கூறிவிட்டது.

இன்னும் ஏனோ சில தமிழ்ப் புலவர்களும் ஆசிரியர்களும் தங்களுடைய குறையைத் தீர்க்கவில்லை யென்றும் தங்களைச் சரியாக மதிக்கவில்லை யென்றும், மாநாடுகள் கூட்டிக் கொண்டு பொதுக் கூட்டங்கள் நடத்திக் கொண்டு திரிகிறார்கள் என்பதுதான் யாருக்கும் விளங்கவில்லை.

அரசாங்கம், தமிழ்க்கலையை, நாகரீகத்தைப், பண்பாட்டை, மொழியைக் கைவிட்டு விட்டதென்று விமர்சனப் பேசுகின்ற பொதுமக்கள், இப்பொழுதேனும் உணர வேண்டும்—ஆள வந்தார், தமிழ் என்றாலே உள்ளமுருகி, இலக்கியமென்றாலே மனம் மகிழ்ந்து, 'புலவர்கள்'

என்றாலே முகம் மலர்ந்து, காப்பியம் இயற்றும் தகுதி பெற்ற கவிஞர்கள் என்றாலே அவர்கள் ஒப்புதல் இல்லாமலேயே கூட அவர்களைப் பல்லக்கில் ஏற்றிப் பவனி வருகின்றனர் என்ற உண்மையை.

யாரோ ஒரு புலவர், தொல்காப்பியத்திலிருந்து தொண்டர் புராணம் வரையில், ஆழ்ந்த பற்றோடு பயின்று அகன்ற ஆராய்ச்சிகள் நிகழ்த்தி, காப்பியங்கள் இயற்றும் திறம் பெற்ற போதிலும், தமிழ் நாட்டின் ஒரு மூலையில், 'பவானி' என்பதொரு சிற்றூரில், ஒரு உயர்நிலைப் பள்ளியில், எளிய ஒரு தமிழாசிரியராகப் பல ஆண்டுகளாகப் பணி புரிந்து வருபவர்—இன்னும் நாட்டு மக்களின் போற்றுதலுக்கும், பாராட்டுக்கும் ஆளாகவில்லையே என்பதை எண்ணி—அவரை நாட்டவருக்கு அறிமுகப்படுத்தி பெருமைப்படுத்தும் பணியைச் செய்ய அரசாங்கமே முன்வந்துவிட்டது. இனி என்ன குறை நமக்கு? எப்படி ஏற்படும்?

ஆனால் அப்புலவர் அந்தக் காவியத்தை வெளியிட்டு இரண்டாண்டுகள் கழித்துத்தானா அரசாங்கத்தார் அதைக் கவனிப்பது? என்பதை எண்ணும்போதுதான் ஆளவந்தாரின் மந்தநடை நம்மை வருந்தச் செய்கிறது.

இப்பொழுதுள்ள அமைச்சர் குழு ஏற்பட்ட நாளிலிருந்தே உலவிக் கொண்டு வரும் இந்த இலக்கியத்தைப் படித்துப் பார்க்க இவ்வளவு நாளா வேண்டும்? ஒரு வேளை, அக் காவியத்தைப் படித்த பொழுதே அதன் அருமையை உணர்ந்து, படித்துப் படித்து அதன் சுவையில் ஈடுபட்டு இவ்வளவு காலத்தையும் செலவிட்டிருப்பார்களோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

என்றாலும், ஆளவந்தார் தமது கடமையை மறந்து விடவில்லை. அவர்கள் செய்ய வேண்டிய நற்றொண்டை, இராமபிரான் திருவடி தொழுவதனால் கிடைக்கும பலன் பெறவும், அநுமான் அருள் பெறவும், கருடாழ்வார் கடாட்சம் பெறவும் தடையில்லாமல் கவனித்துக் கொள்ள வேண்டிய திருத் தொண்டை—நிறைவேற்றி விட்டார்கள்.

இனி—நாட்டிலே எவ்வித வேறுபாடும், வகுப்புணர்ச்சியும், கலகமும் தலைகாட்டாதவாறு செய்துவிட்டார்கள் இந்த உத்தரவின் மூலம்.

பேச்சுரிமையும், எழுத்துரிமையும் எல்லோருக்கும் வேண்டும் என்று எழுத்தறிவற்ற பாமரர்களும் பேசும் இக்காலத்தில் படித்த மந்திரிகள், தமது கடமையை நிறைவேற்றத் தவறுவார்களா?

எனவேதான், படித்தவர்கள் தான் ஆளவந்தார்கள் என்பதைக் காட்டிக்கொள்ள, புலவர்களால், கவிஞர்களால் இயற்றப்பட்ட காவியங்களானாலும்—

தாங்கள் படித்துப் புரிந்து கொண்டுவிடுவோம் என்பதைத் தெரிவிக்க முன் வந்துள்ளனர்.

சென்னை அரசாங்கம், பல மாதங்களாகவே கஷ்டப்பட்டு ஆராய்ந்து, இ. பி. கோ. 153. ஏ, 295. ஏ, ஆகிய பிரிவிகளின்படி— ஆட்சேபகரமான அம்சங்கள் இருப்பதாகத் தேடிப் பிடித்து, குற்றஞ் சாட்டி—புலவர். குழந்தை அவர்களால் இயற்றப் பட்ட 'இராவண காவியம்' என்ற நூலைப் பறிமுதல் செய்துள்ளது. வாழ்க பறிமுதல்! வீழ்க எழுத்துரிமை! என்று வாழ்த்தவே தோன்றுகிறது நமக்கு.

நமது வேலைக்காரச் சிறுவனோ நம்மைப் பார்த்தே சிரிக்கின்றான். ஒருவேளை அவன் 'அரசாங்கத்தையே' கவிழ்த்து விடச் சூழ்ச்சி செய்பவனோ என்று எனக்கே சந்தேகமாக இருந்தது அவனது சிரிப்பைக் கண்டு.'அரசாங்கத்தார்' மட்டும் அச்சிரிப்பைப் பார்த்திருந்தால், அதற்கும் ஒரு தடை விதிக்காமலா இருந்திருப்பார்கள்?

"ஏண்டா சிரித்தாய்?" என்றேன் நான். "இல்லை, இராவண காவியத்தைத் தடை செய்துள்ளார்களே—சார் இவர்கள். இவர்கள் இருக்கிற பீடத்திலே இனி என்றைக்குமே எதிர்க் கட்சிக்காரர்கள் இடம் பெற மாட்டார்களா?" என்றான். "ஏன்? இடம் பெறுவார்களே" என்றேன்.'அவர்கள் ஒருவேளை, இராமாயணம், பெரிய புராணம், கந்த புராணம் முதலிய எல்லா ஏடுகளுக்குமே தடையுத்தரவு பிறப்பித்து விட்டால் என்ன சார் ஆகும்?" என்றான் அவன்.

எனக்கும் சிரிப்புத்தான் வந்தது. இன்று இராவண காவியத்தில் என்னென்ன குற்றங்கள் காட்டப்படக் கூடுமோ, அவைகள் வேறு எந்தப் புராண இலக்கியத்திலும் இல்லாமலில்லை. இராமாயணமே கூட, அத்தகைய குற்றச் சாட்டுகளினின்றும் தப்ப முடியாது என்றே தோன்றுகிறது.

இந்த நிலையில் இராவண காவியத்தைப் பறிமுதல் செய்து விட்டது, இன்றைய அரசாங்கம். பாரதியார் பாடலுக்கு ஒரு காலத்தில் தடையிருந்தது. இன்று அப் பாடல்கள்—ஆளவந்தார்க்கே— அரிய பிரச்சாரத் துணையாக உள்ள காரணத்தால் அரியணை ஏறியுள்ளன. இன்னும் எவ்வளவோ ஏடுகள் எவ்வளவோ நாடுகளில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. அவையெல்லாம் இன்று உரிமையோடு திகழ்வது மட்டுமல்ல, புகழ் பெற்றும் விளங்குகின்றன. அதைப் போன்றே புலவர் குழந்தையின் இலக்கியத்தின் புகழ் வளர இருப்பதால் தான் போலும், அரசாங்கம் அதனைப் பறிமுதல் செய்துள்ளது என்றே தோன்றுகிறது. வாழ்க பறிமுதல்! வீழ்க எழுத்துரிமை!

தாவி எழு!

தமிழ் ஒளி

மாணவ உலகே! விழிப்புக்கொள்; ஆரிய
ஆணவம் மாய ஆர்த்தெழு வாய்நீ!
உன் இனம் 'பொன்னினம்' என்ன, உயர்வுற
இன்னே எழு! உன் திறள்தோள் உயர்த்து!
ஆரப்பன் நாட்டில் ஆரியம் திகழ்வது?
தேரப்பா! ஆரியம் வீழ்த்தியே தீரப்பா!
கலையுளம் கொண்ட காளையே! சூழ்ச்சி
வலையை அறுத்தெறி! இதுவே வாழ்நெறி!
போர்ப்பறை முழக்கு! புயலெனச் சீறு!
புல்லர் அஞ்சஉன் வல்லமை காட்டு!
மார்தட்டு, பகைவர் நிலைகெட்டு வீழ!
சீர்கெட்ட மடமை சிதைவுறச் செய்திடு!
திராவிடம் உற்ற சிறுமையைத் தீய்த்திடு!
தூக்குக் கயிறினைத் தொட்டிழுத் தாலும்
துளியும் அஞ்சாதே! ஒளியிலா நாட்டில்
ஒளியினைப் பாய்ச்சஉன் உயிரையும் ஈவாய்!
எழுக! இளைஞனே, தமிழ் இனம்
தழைக்க இன்றே தாவி எழுந்திடு!

——:o:——

ஸ்தாபன ஐக்யம்

இந்தியத் தொழிற் சங்க இயக்கம்

அறிஞர் அண்ணாத்துரை

(17-5-48 சென்னை, வானொலியில் நிகழ்த்திய சொற்பொழிவு)

உலக அரங்கில், மிக முக்கிய மானதாகவும், பலருடைய மனதை மருட்டக்கூடியதாக வும், தொழிலாளர் பிரச்னை வளர்ந்து விட்டது. நீதியையும் நேர்மையையும், சமுதாயத்தில் அமைதியையும் சுபீட்சத்தை யும் விரும்பும் எவரும் தொழி லாளர் பிரச்னையை அலட்சி யப்படுத்திவிடவோ, அல்லது அடக்கு முறைகளால் அழித்து விடக் கூடுமென்றே எண்ண முடியாது. பிரச்னை நாளுக்கு நாள் வலுத்துக் கொண்டும், புதுப்புது உருவங்களைக் காட் டிக் கொண்டும் இருக்குமே ஒழிய தானாக மங்கி விடவும் செய்யாது, தாக்குதலால் தகர்ந் தும் போய் விடாது. பொது அறிவும், ஜனநாயக உணர்ச்சி யும் வளர வளர பிரச்னை பலம் பெற்றுக் கொண்டுதான் வரும். எனவே, தொழிலாளர் ஸ்தாபனத்தைப் பற்றிச் சிந் திக்க வேண்டியது, பொறுப் புள்ள யாருக்கும் அவசியமான தாகிவிட்டது ஸ்தாபன ரீதியாகப் பிரச்னைகளைக் கவ னித்து, முடிவு செய்யும் எண் ணமும் ஏற்பாடும், இப்போது எங்கும் பரவிவிட்டது. எந்த ஸ்தாபனமும் ஐக்கியத்தை, ஒற்றுமையைக் கொண்டதாக இருந்தால் மட்டுமே, வலிவுடன் விளங்கும், பயன் விளையும். ஆகவே ஸ்தாபன ஐக்கியத் தைக்கவனித்தாக வேண்டும்.

ஸ்தாபனம்—அதாவது அமைப்பு—பலருடைய எண் ணங்களைத் திரட்டி, பல ருடைய சக்திகளை ஒருங்கு சேர்த்து வைக்கப்பட்டிருக்கும் ஓர் பொது இடம், — ஓர் பாசறை. பாசறையிலே, பல விதமான போர்க்கருவிகளும் வீரர்களும் தேவை. கருவி களின் எண்ணிக்கையும் வகை யும் வளர்ந்து கொண்டு இருக்க வேண்டும்—பாசறையின் உப யோகம் அதிகப்பட வேண்டு மானால். வாள் மட்டும் போர் குவித்து வைத்துக் கொண்டு, கேடயம் தேடாமலிருப்பதோ, விற்களைக் குன்றெனக் குவித் துக்கொண்டு அம்புகளில்லாம லிருப்பதோ, துப்பாக்கிகளைக் கிடங்குகளில் குவித்து வைத் துக்கொண்டு வெடி மருந்து தேடாமலிருந்து விடுவதோ, இவை யாவும் ஒழுங்காகவும் தேவைக்கேற்ற அளவும் இருந்து, இவைகளைத் திறம்பட உபயோகிக்கும் ஆற்றலுள்ள வீரர்கள் இல்லாதிருப்பதோ, அன்றி வீரர்கள் இருந்தும், இவர்களை நடத்திச் செல்லும், படைத் தலைவன் இல்லாதிருந் தாலோ, பாசறை இருந்து என்ன பயன்? அழகிய சிலை போலிருக்குமே தவிற, பயன்

தரும் மனிதராக இருக்க முடியாது.

ஸ்தாபனம் ஒரு சில குறிப்பிட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டப்படுகிறது. ஸ்தாபனம், கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு கட்டப்படுகிறபோது அந்த ஸ்தாபனத்தின் பலன், அந்தக் கொள்கைகள் வெற்றி பெற—அந்த ஸ்தாபனம் ஆற்றல் பெருவதைப் பொருத்தே இருக்கிறது. கொள்கைகள் ஏற்படுவதே, உள்ள குறைகளைத் தீர்த்து வைப்பதற்கோ, நிலைமைகளை மாற்றி அமைப்பதற்கோ, புதிய தோர் நலனைக் காண்பதற்கோ தான். தொழிலாளர்களின் ஸ்தாபனம், சில அடிப்படைக் கொள்கைகளின் மீது கட்டப்பட்டிருக்கிறது என்ருல், தொழிலாளர்களின் சில பல குறைபாடுகளை நீக்கிக் கொள்வதற்குத்தான்.

பதினெட்டாம் நூற்ருண்டுக்குப் பிறகு, தொழில் முறை மாறிவிட்டது. உலகிலே, அதற்கு முன்பு எந்த நாட்டிலும் குடிசைத் தொழில் முறையும், தேவைக்காக மட்டும் பொருளை உற்பத்திச் செய்து கொள்வது மட்டுமே இருந்து வந்தது. பதினெட்டாம் நூற்ருண்டின்போது, தொழிற் புரட்சி ஏற்பட்டு, குடிசைத் தொழில் முறை மாறி, யந்திரத் தொழில் முறையும், ஒரு சிலர் பலரை வேலைக்கமர்த்தி தொழில் நடத்தி, உற்பத்தியைப் பெருக்கி பண்டங்களை விற்று, இலாபம் பெறுவது மான முறை வளர்ந்தது. இதனுல், ஓரிடத்தில், ஏராளமானவர்கள் கூடித் தொழில் செய்யும் முறையும், அந்தத் தொழிலின் இலாபம், தங்களுக்குக் கிடைக்கும் கூலிபோக மீதமிருக்கும் பகுதி வேறிடம் போவதும், தொழிலாளர்களுக்கு விளங்கலாயிற்று. இந்த விழிப்புணர்ச்சி, ஏற்பட்டதும், தொழிலாளர்கள் முதலில், தங்கள் விதிவினை, முதலாளிகளின் புண்யம் ஆகியவற்றைப்பற்றி எண்ணி, தங்கள் மனதுக்கு ஆறுதலைத் தேடிக்கொண்டதுடன், தங்களுக்கும், பயபக்தியுடன் நடந்து வந்தால், ஆண்டவனின் அருள் கிடைக்கும் என்று நம்பிக் கொண்டிருந்தனர். சிலர் தங்கள் காய்ந்த வயிற்றையும், கடமை உணர்ச்சியுடன் தாங்கள் பாடுபடுவதையும் எடுத்துக்காட்டி, தொழில் அமைத்தவர்களின் நல்லுணர்ச்சிக்கும் தயாள குணத்துக்கும் மனுப் போட்டு, அதனுல் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்ள முயன்றனர். இந்த முறை நெடுநாட்களுக்குப் பயன்தரவில்லை. சிலருடைய தயாள குணத்தினுல், ஒரு பெரிய கூட்டத்தின் வளர்ந்து வரும் தொல்லைகளைப் போக்கிவிடமுடியாது. இதனுல் தொழிலாளர்களின் வாழ்க்கையிலேயும், குறிப்பிடத்தக்க வளம் உண்டாகவில்லை. வறுமை கொட்டலாயிற்று, வாட்டம் அதிகரித்தது. அதே போது, தொழில்முறை மாறி, பண்ட உற்பத்தி அதிகரித்து, செல்வம் கொழித்ததால், வாழ்க்கை வசதிகள் அதிகமாகி நாகரீகம் மேலோங்கிவிட்டது.

நாகரீகத்தின் முழுப்பயனை ஒரு சிலர் அடைய, அந்த நாகரீகத்தின் அடிப்படைக்கு அரணாக அமைந்திருந்த பெரும்பாலானவர்கள் அந்த நாகரீகத்தின் பயனை அனுபவிக்காமலிருந்தபோது, அவர்கள் மனதிலே, ஓர் அதிர்ச்சி, ஓர் குமுறல் ஏற்பட்டது. தங்கள் நிலை மோசமாகிற நேரத்திலே, தங்கள் உழைப்பின் விளைவாக ஏற்பட்ட வாழ்க்கை வசதிகளில் துளியும் தங்களுக்குக் கிடைக்காதது, அவர்கள் மனதிலே, ஓர் அணைக்க முடியாத தீயை உண்டாக்கிற்று. சேகரித்த தேனை இழந்துவிடும் வண்டுகளாகத் தமது வாழ்க்கை இருப்பதை அறிந்தனர். மனம் நொந்தனர். குறைகளைப்பற்றி ஒருவருக்கொருவர் பேசினர். ஒவ்வோர் நாளும் பேசினர், கூடிக்கூடிப்பேசினர்.

"என்னதான் இதற்குப் பரிகாரம்? பொறுத்திருந்து பார்ப்போம், அவர் மனம் இளகாமலா போகும்? ஆண்டவன் அருள் கிடைக்க வேண்டும், அவர் நம்மைக் கைவிடமாட்டார்" என்று துவக்கப்பட்ட உரையாடல்,—கொஞ்ச காலத்தில் "எத்தனை முறை கேட்பது? எவ்வளவு கெஞ்சிக் கெஞ்சிக் கேட்பது, ஏழைக்கு இரங்காதவனும் ஒரு மனிதனா? அவன் மனம், கல்லா இரும்பா? கொஞ்சமாவது ஈவு இரக்கம் இருக்கிறதா?" என்று மாறி,—"இப்போது முடியாதாம் இலாபம் இல்லையாம் முன்போல" என்று பேச்சு மறுபடியும் மாறி,—"நமது உழைப்பினால் கொழுத்தான்; இலாபம் மலைபோலக் குவிந்திருக்கிறது, நாம் வாடுகிறோம் வறுமையால், அவன், அரச போகத்தில் இருக்கிறான். நமது உழைப்பு தரும் இலாபத்தால் தானே அவனுடைய நிலை கோடீஸ்வரன் என்று கூறும்படி இருக்கிறது" என்று பேச்சு, கொஞ்சம் முடுக்காகிவிட்டது. "கந்தன் கேட்டானும், கால் ரூபாயாவது அதிகம் தேவை, கூலியைக் கொஞ்சம் உயர்த்துங்கள் என்று முடியாது என்று, சொல்லி விட்டாராம். முத்தன் பேசச் சென்றானாம், முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டு, எதுவும் முடியாது போ, என்று சொன்னாராம். முனியன், உள்ளே நுழைந்தபோது அவன் மீது நாயை ஏவினார்களாம்'— என்று உரையாடல் வளர்ந்து, கடைசியில், கந்தனும் முனியனும், முத்தனும் காத்தானும், இப்படி நாம் தனித்தனியே, நமது குறைகளை எடுத்துக் கூறிப் பரிகாரம் தேடிப் பயனில்லை, நாமெல்லாம், பொதுவாக நமக்குள்ள குறைகளைக் கூறி, மொத்தத்திலே பரிகாரம் தேடவேண்டும், அதுதன் சரியான வழி என்று முடிவு செய்தனர். ஸ்தாபனங்கள் தோன்றின.

இந்த முடிவுக்குத் தொழிலாளர் வந்து சேர, ஏறக்குறைய அரை நூற்றாண்டுக் காலம் பிடித்தது.

ஆகவே, குறைகளை உணர்ந்து, அவைகளுக்குக் காரணம் யாவை என்பது

பற்றிய விவாதத்திலே ஈடுபட்டு, உண்மைக் காரணத்தைக் கண்டுபிடித்து, பிறகு அவைகளைப் போக்கிக் கொள்ள, தனித்தனியாக முயற்சித்துப் பார்த்து, முடியாது போனபிறகு தொழிலாளர்கள் ஓர் ஸ்தாபன ரீதியாக தமது குறைகளை எடுத்துக் கூறித்தான் பரிகாரம் தேட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். தங்கள் வாழ்க்கை முறையும் தொழில் முறையும் தங்களுக்குள்ள வாழ்க்கை வசதிக் குறைவுகளும், எல்லாத் தொழிலாளருக்கும் ஓரேவிதமானதாக இருக்கக் கண்டு, அனைவருக்கும் உள்ளது ஒரே வகை வியாதி என்று தெரிவதால், அனைவரும் ஒரே வகை மருந்து தேடவேண்டும் என்று முடிவு செய்து ஸ்தாபனங்களை ஏற்படுத்தினர். இந்தப் பொதுத்தன்மை கெடாதிருக்கும்மட்டும், ஸ்தாபனம் அவசியமானது என்பதுமட்டுமல்ல, பயனுள்ளதுமாகும். எனவே ஸ்தாபன ஐக்யம், இந்தப் பொது உணர்ச்சி கெடாதபடி பாதுகாத்துக் கொண்டால்தான் முடியும். கந்தன் முருகனுக்கும் சேர்த்துத்தான் நியாயம் கோருகிறான். முத்தன், மூவருக்கும் சேர்த்தே நீதி கேட்கிறான். ஒவ்வொருவரும் மற்ற யாவருக்கும் சேர்த்தே நீதி நியாயம் கேட்கிறார்கள். ஸ்தாபனத்தின் முக்கிய இலட்சணம் இதைப் பொறுத்தே இருக்கிறது. அதைச் சேர்ந்தவர் அனைவருக்கும் நலன் கிடைக்கிறது என்பது விளக்கமானால்தான் ஸ்தாபனத்திலே ஐக்ய உணர்ச்சி இருக்க முடியும். கந்தனுக்குத் தெரியாமல் முருகனும், முருகன் அறியாவண்ணம் முத்தனும், தனித்தனியே நடவடிக்கை எடுத்தால், ஸ்தாபனம் உடைந்துபடும். பொதுத்தன்மைதான் ஸ்தாபனத்துக்கு அரண்.

இந்தப் பொதுத்தன்மை பலமாக இருக்கவேண்டுமானால், ஸ்தாபனம், மிக மிக நியாயமான கொள்கைகளின் மீது கட்டப்படவேண்டும்.

குடும்பம் முதற்கொண்டு கோலோச்சும் சர்க்கார் வரையிலே, ஸ்தாபனங்கள்தான். ஒருவகைப் பொதுத்தன்மை—பொதுவான பணிகள் — அனைவரையும் கட்டுப்படுத்தும் பொதுவான பொறுப்புகள், பலன்கள் இவைகளில் உண்டு. இதிலே எது கெடினும், ஸ்தாபனத்தின் ஐக்யம் நிச்சயமாகக் கெட்டுவிடும். அண்ணன் அறியாதபடி தம்பி செலவிடும் பத்து ரூபாய் அண்ணன் தம்பி என்ற பாசத்தால், சில நாட்களுக்குக் குடும்பத்தை எவ்விதத்திலும் பாதிக்காமலிருக்கும். ஆனால் சிலகாலத்துக்குத்தான்—எப்போதுமல்ல. தம்பியின் பழக்கமே அண்ணன் அறியாவண்ணம் தன்னலத்துக்காக நடந்து கொள்வது என்றாகிவிட்டால், குடும்பக் கட்டுப்பாட்டை நிலை நிறுத்த எத்தனைவிதமான பந்தம் பாசம் பேசியும், பழைய கதைகளைச் சொல்லியும், இராமனையும் இலட்சுமணனையும் துணைக்கு அழைத்தும் முடியா

ததாகிவிடும்—குடும்பம், பிள ளுறும் பிரியும் அண்ணன் தம்பிக்குள்ளாக, ஒரு குடும்பத் திலேயே இது நிலை என்ருல், ஒரு ஸ்தாபனத்தில் தலைவருக் கும் துணைத்தலைவருக்கும், அல் லது தலைவருக்கும் ஸ்தாபனத் தில் மற்ற முக்கிய உறுப்பின ருக்குமிடையே கடைசிவரை யில், பாசம் ஒன்றை மட்டும் கொண்டு, அன்பு உண்டாக்கி ஸ்தாபனத்தை உடையாதபடி பார்த்துக்கொள்ள முடியாது. அமைப்புகளின் ஒற்றுமை, அத னைச் சார்ந்தவர் அனைவரும், ஒரே நோக்கம் கொண்டு ஒரே வகையான குறிப்பிட்ட கொள் கைக்காகப் பாடுபடுவர், என்ப தைத்தான் பொருத்து இருக் கிறது. இந்த ஒற்றுமையும் போலியானதாக இருக்கக் கூடாது, இருப்பின் மிகமிகச் சாதாரண சங்கடமும், ஸ்தாப த்துக்குப் பெரியதோர் இடை யூருகிவிடும்.

ஸ்தாபனம் ஏற்படச்செய்வ தற்குக் கொள்கைகள் தேவை என்பது, கட்டடம் கட்டுவ தற்கு அதற்குரிய சாமான்கள் தேவை என்பதுபோன்றது. கட் டடம் அமைக்கும் கடினமான காரியத்துக்கு, அதற்கான திறமை வாய்ந்த கட்டட வேலைக்காரர் தேவைப்படுவது போல சில குறிப்பிட்ட கொள் கைகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு ஸ்தாபனத்தை அமைக்க, திறனும் உறுதியும் கொண்ட அமைப்பாளர் தேவை. அந்த அமைப்பாள ருக்கு, தாம் எந்தக் கொள்கை களை அடிப்படையாகக் கொள் வது என்று கண்டறியும் திறனும், கட்டடக் கட்டுக் கோப்பு முறையிலே ஸ்தாப னம் இருக்கவேண்டும் என்ற நோக்கமும் நிச்சயமாகத் தேவை. வலிவுள்ள இரும்பு கர்டர்களும், வகை வகையான மரச்சாமான்களும், உயர்தர மான சிமிட்டியும், அழகான பித்தளைக் குமிழ்களும், அறைத்தெடுத்த சுண்ணும்புக் குழையலும், தேவை. ஆனல் இவைகளை, எங்கெங்கு எந் தெந்த அளவில் எந்தெந்த முறையில் உபயோகித்தால், கட்டடத்தின் கட்டுக்கோப்பு சிறந்த முறையிலும், உறுதியும் பயனும் மிகுந்த வகையிலும் இருக்கும் என்பதை அறிந்து அமைக்கும் அமைப்பாளர்கள் தேவை. அவர்களால்தான் ஸ்தாபனங்கள் நல்ல முறை யிலே அமையும். அமைந்தபிற கும், கட்டுக்கோப்பு கெடாத படி பார்த்துக்கொள்ளும் திறம் இருக்கவேண்டும்— அக்கரை யும் இருக்கவேண்டும்.

பெரியதோர் மாளிகையில், ஒரு சிறிய ஜன்னல் அவ்வளவு முக்கியமானதல்ல. அந்த ஜன் னல் இல்லாமற் போனுலும், மாளிகை இருக்கத்தான் செய் யும். அடிப்படையும், குறுக் குச் சுவரும், மேல் அமைப்பும் சரியாக இருக்கு மட்டும்; ஜன். னல் இருந்தாலும் எடுபட்டா லும், கெட்டாலும், மாளி கைக்கு ஒரு சேதமுமில்லை. ஆனுலும், மாளிகையிலே அக் கறையுள்ளவர்கள் அந்தச் சிறு ஜன்னலைக் கூடத்தான் கவனித்துக் கொள்வார்கள். கெடாதபடி; ஜன்னலைமட்டு மல்ல, அதன் கம்பிகளிலே

ஒன்று கெட்டாலும், கவலைப் படுவர். ஏனெனில், ஜன்னலின் கம்பி கெட்டு, பிறகு அது எடுபட்டு, அதன் பலனாக ஜன்னல் கெட்டு கள்ளனோ காற்று மழையோ உள்ளே புகுந்து, அதன் விளைவாக மாளிகைக்கு நஷ்டமும் கஷ்டமும் ஏற்பட்டு விடக்கூடுமே, என்ற யூகம், மாளிகைக்காரருக்கு இருக்கும். எனவே அவர் ஜன்னலின் கம்பி, மாளிகையின் அடிப்படை அல்ல என்றபோதிலும், அதனையும்தான், அக்கறையுடன் கவனித்துக்கொள்வார். ஸ்தாபனங்களிலும் இது போலத்தான். தொழிற் ஸ்தாபனங்களில் ஐக்கியமும் பலமும் கெடாதிருக்க வேண்டுமானால், ஜன்னல் கம்பியையும் ஜாக்கிரதையுடன் கவனிக்கும் மாளிகைக்காரர் போல ஸ்தாபனத்தில் சகல உறுப்பினரையும், கவனித்து கட்டுக்கோப்பு கெடாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். இந்த முறையைக் கவனியாததால், தொழிலாளர் ஸ்தாபனங்களிலே ஒற்றுமைக்குறைவு ஏற்பட்டு, அதன் விளைவாக, அதனுடைய போரிடும் சக்தி சிதறிவிட்டதுண்டு. பெரிய மரங்களை, மாளிகை மண்டபத்துக்குத் தூண்களாக அமைத்துவிட்டால் மட்டும் போதாது. மிகமிகச் சாதாரண செல், மரத்திலே சிறு துளைகளிலே புகுந்து கொள்ளாதபடியும் பார்த்துக்கொள்ள வேண்டும். செல், அரிக்க ஆரம்பித்தால் செம்மரமும் சரி எம்மரமும் சரி, கெடும். அதனுடன் ஸ்தாபனமும் கெடும்.

தாங்கும் சக்தி, தாக்கும் சக்தி இரண்டும் ஒருசேர ஒரு ஸ்தாபனத்துக்குத் தேவை. அதற்கேற்ற வகையிலே அந்த அமைப்பு இருக்கவேண்டும். இருக்கவேண்டுமானால், இருவகை சக்திகளையும் திரட்டவும், திரட்டியதை உபயோகிக்கவும், ஏற்ற, தகுதிபடைத்தவர்கள் ஸ்தாபனத்தில் இருக்க வேண்டும். ஒருவர் இருப்பது மற்றவருக்கு வலிவு, என்ற எண்ணம் குன்றாது குறையாது இருக்க வேண்டும். அந்த எண்ணத்தாலேயே, ஸ்தாபனத்தின் ஐக்கியத்தைக் குன்றாமல் காப்பாற்ற முடியும். கொள்கைகள், நிலைமைகளால் மாற்றமடையும் போது, ஸ்தாபன ஐக்கியத்துக்கு ஆபத்து நேரிடக்கூடும். அதுபோலவே, ஸ்தாபனத்தின் நடைமுறையின்போது, யார் எதைச்செய்வது, எது எப்படிச் செய்யப்படவேண்டும், என்ற பிரச்னைகள் கிளம்பி, அதன் பயனாக ஸ்தாபன ஐக்யம் கெடுவதுண்டு. ஆனால், அடிப்படை பலமாக இருந்தால் மாளிகை கெடாதிருப்பது போல, கொள்கை பலமிருந்தால் ஸ்தாபனம் கெடாது. அதற்காக, ஸ்தாபனத்தின் ஐக்யம் கெட்டுவிடத் தக்க நிலைமைகள் ஏற்படும்போது, அக்கரையற்று இருந்துவிடவும் கூடாது. தொழிலாளர் ஸ்தாபனம். மனக்குறையின் மீதும், அதனால் இயற்கையாக ஏற்படக்கூடிய ஆத்திரத்தின் மீதும், ஏற்பட்டுவிடுவது உண்டு. இவை சரியான அடிப்படை அல்ல. வாழ்

வதற்கு உழைக்கிறோம், ஆனால் வாழ்வு இல்லை. உழைக்காது வாழ்கிறார்கள், அந்த வாழ்வுக்குத் தங்கு தடை இல்லை. வாழ்வோம் அனைவரும் — வாழ உழைப்போம் — ஒருவர் உழைப்பின் மீது மற்றொருவரின் வாழ்வு அமைக்கப்படும் அநீதியை ஒழிப்போம், என்ற அடிப்படைகளின்மீது கட்டப்பட்டுள்ள தொழிற் ஸ்தாபனங்கள், அந்த உன்னதமான இலட்சியம் ஈடேற வேண்டும் என்ற பெரு நோக்கத்தை உறுதுணையாகக் கொண்டு ஸ்தாபனத்தின் நடைமுறை வேலையில், உறுப்பினர்களுக்குள் உள்ளக் கொதிப்போ கசப்போ ஏற்படாத வகையிலும், இன்னார் செய்கிற காரியம் இன்னார்க்குச் சரி என்று படவில்லை என்ற நிலை ஏற்படாத வகையிலும், ஸ்தாபனத்தின் வேலைகளில், அவரவர்களுக்கு அவரவர் ஆற்றலுக்கேற்ற, ஆனால், ஸ்தாபனத்தின் மூலக் கொள்கைக்கு ஊறு நேரிடாத முறையில், பணி உண்டு என்றமுறையில் ஸ்தாபனத்தை நடத்திச் சென்றால், ஐக்யம், கெடாது — பலனும் நிச்சயம் விளையும்.

ஸ்தாபனத்தின் பலம் வளரும்போது ஏற்படும் அல்லலை விட, ஸ்தாபனத்தின் பலம் வளர்ந்தபிறகு ஏற்படும் அல்லல் அதிகம். ஸ்தாபனம் வளரும் போது இருக்கும் ஸ்தாபன ஐக்யம், ஸ்தாபனம் நன்றாக வளர்ந்த பிறகு, ஓரளவு ஆபத்துக்குள் சிக்கி விடக்கூடும். வளர்ந்துள்ள பலத்தைக் கொண்டு என்ன செய்வது, எவ்விதம் அதைச் செய்வது, யாரைக்கொண்டு செய்வது, எப்போது செய்வது, என்ற பிரச்னைகள், ஸ்தாபனத்தின் பலம் வளர்ந்த பிறகு ஏற்படும். ஐக்யத்துக்கு ஆபத்து அதனால் வரக்கூடும். அந்த நெருக்கடியான நேரத்திலெல்லாம், ஸ்தாபனத்தின், மூலக்கருத்துக்கே முதலிடம் தரப்படவேண்டும் அப்போதுதான் ஸ்தாபனம் சிதையாமலிருக்கும்.

ஸ்தாபன ஐக்யம், ஒரு முறை பாடுபட்டுச் சாதித்துவிட்டு, அதைக் கண்டு சந்தோஷப்பட்டுக்கொண்டு, இனிக்கவலையில்லை என்று இருந்துவிடக் கூடிய ஒரு சம்பவமல்ல. எப்போதும் விழிப்போடு இருந்து கொண்டு, அவ்வப்போது பழுது பார்த்துக்கொண்டு, எந்தச் சமயத்திலும் மூலக் கருத்து கெடாதபடியும் கவனித்துக்கொண்டு இருந்தால் மட்டுமே காப்பாற்றக் கூடிய, ஓர் அற்புதமான ஜீவ சக்தி. ஸ்தாபனத்தின் பலமும் பயனும், அந்த ஐக்யத்தை — ஒற்றுமை உணர்ச்சியைப் பொருத்தே இருக்கிறது. வீணை உயர்தரமானதுதான். வித்வானும் தேர்ந்தவர்தான், ஆனாலும் ஒரு நரம்புமட்டும் ஓரிடத்தில் தளர்ந்து இருக்கிறது என்றால், வீணையின் நாதமும் கெடும், வித்வானின் இசையும் பாழ்படும். ஸ்தாபனத்தின் ஐக்யம், சங்கீதத்துக்கு உள்ள சுருதி ஞானத்தைப் போன்றது — மிகமிக் ஜாக்ரதையாகக் கவனிக்கபட வேண்டிய விஷயம்.

ஒன்றுபட்டிருந்தால் . . . . !

'கழல்

அவர்களிருவரும், ஒரே காலத்தில் வாழ்ந்தவர்கள், ஒரே நாட்டைச் சேர்ந்தவர்கள், பொதுமக்கட்கே பணியாற்றியவர்கள், நீதிக்காக வாதாடியவர்கள், ஒரே இலட்சியத்தையும் கொண்டவர்கள், இணையற்ற எழுத்தாளர்களெனப் புகழ் பெற்றவர்கள், ஒருவரை ஒருவர் அறிந்திருந்தவர்களே, பொது மக்களிடம் செல்வாக்கும் பெற்றவர்கள் என்றாலும், அவர்களால் ஒன்றுபட்டிருக்க முடியவில்லை.

இன்றோ, ஏட்டிலும் நாட்டிலும், உலக முழுவதுமே அவ்விருவரும் இணைத்துத்தான் பேசப்படுகின்றனர். ஒருவரை விட்டு ஒருவரைப் பிரித்துரைப்பது, அந்தக் காலத்தில் அந்நாடு பெற்ற எழுச்சியை—அவ்வளவாகப் பிரதிபலிப்பதில்லை. காலச் சுழலில் இருவரும் நெருங்கப் பிணைக்கப்பட்டுள்ளனர். பேரறிஞர்கள், தங்கள் காலத்தில், தமக்குள் பிரிந்து நின்ற போதிலும், பிற்காலத்தில், மக்கள் மனக்கண்முன் ஒன்று சேர்க்கப்பட்டு விடுகின்றனர். அதனால் மக்களும் பயனடைகின்றனர்.

அவர்கள்தான் பிரஞ்சு இலக்கியத்திலே—ஏன் உலக இலக்கியத்திலே கூட—மறக்க முடியாத இரு பெரும் எழுத்தாளர்களான வால்டேரும் ரூசோவும். அறிஞர்கள் போற்றும் அழியாப் புகழடைந்த அவ்விரு எழுத்தாளர்களையும் ஒப்பிட்டு நோக்குமிடத்துச் சுவை மிக்க நிகழ்ச்சிகள் சில நம்மைத் திடுக்கிடச் செய்கின்றன.

வால்டேர் ரூசோவைவிட 18 ஆண்டுகள் மூத்தவர். ஆனால் இருவரும் ஒரே ஆண்டில் (1778) உலகத்தை விட்டு அகன்றவர்கள்.

தம் வாழ்நாட்களிலே இருவரும் அன்பு என்ற கயிற்றினாலே இறுகப் பிணைந்திருந்தவர்களல்லர்; தம் தம் கருத்து வேற்றுமைகளினால் விலகி நின்றவர்கள். டைடராட் என்ற பேரறிஞன் துவக்கிய கலைக்களஞ்சியத்தில் "ஜினிவா" என்ற தலைப்புள்ள கட்டுரை வெளிவந்ததிலிருந்து இருவருக்குமிடையே இருந்த கொஞ்சநஞ்ச அன்பும் விட்டு அகன்றது. அதன் பின், எத்துறையிலும், அவ்விருவரும் வாழ் நாள் முடியும் வரை எதிரிகள்தான்!

இலக்கியத் துறையிலே, வால்டேர் பழக்க வழக்கத்திற்குப் பாதுகாப்பு அளிப்பவர். மகாகவி ராசின், கார்னேய் இவர்களின் எண்ணங்களைப் பொன்னாகப் போற்றி வளர்த்தவர். தன் எண்ணங்களுக்குக் கட்டுரைகளில் தனிப்பட்ட இடங் கொடுக்காமல் பொதுவாக மனிதனின் உள்ளக்கிடக்கையைப் படம் பிடித்துக் காட்டுபவர். ரூசோவோ, பழமைக்கு எதிரி; எத்துறையிலும் புதுமையைக் காண விழைபவர். "நான்" என்ற சொல்லைப் 'பிரஞ்சு' இலக்கியத்திலே முதன் முதலாகப் பொறித்தவர். எவர் தூற்றலையும் பொருட்படுத்தாமல் இடுக்கண் வருகால் நகைத்து நின்று, தன் எண்ணங்களைப் பெருவாரியாகத் தன் நூற்களிலே பொறித்த வீரர். தன் காலத்து இளைஞர்களான ஹியூகோ போன்ற உண்மைக் கவிகளுக்கு வழி காட்டியவர்.

வால்டேர் எந்த எண்ணத்துடன் வாழ்க்கையிலே ஈடுபட்டு வாழ்ந்து வந்தாரோ, அந்த எண்ணங்களுக்கு

நேர்மாறாக வாழ்க்கையை நடத்திக் காட்டியவர் ரூசோ.

வால்டேர் செல்வத்திலே உருண்டவர்; நவநாகரிகத்திலே விருப்பங் கொண்டவர். எப்போதும் இன்பத்தையே நாடுபவர். செல்வத்தோடு வாழ்வதிலேயே பெருமை கொள்பவர். நாகரிகத்தின் ஆடம்பரப் போக்கை வெறுத்தவர். நாகரிகம், நாகரிகம் என்று கூறி அநாகரிகத்திலே மக்களை மாயச் செய்யும் மமதையாளர்களை மட்டம் தட்டிய மாதீரர். இயற்கையோடு இசைந்த வாழ்வை மக்களுக்கு வலியுறுத்துபவர். செல்வர்களோடு சேர்ந்து வாழவே வெட்கப் படுபவர்.

இருவர்களும் கடவுள் நம்பிக்கை உடையவர்கள். வால்டேர் உலக நிகழ்ச்சிகளின் ஒழுங்கிற்கும், மனிதர்களின் வாழ்க்கை நெறிக்கும் வழி காட்டியாக கடவுள் ஒருவர் இருக்க வேண்டும் என்று எண்ணுபவர். உழைத்து உருக்குலையும் மக்களை வஞ்சித்து உட்கார்ந்த இடங்களிலே உல்லாச வாழ்வு வாழும் உலுத்தர்களையும், பரலோகத்தையும் பாதாளத்தையும் காட்டிப் பணம் பறித்துப் பலவகை பானங்களைப் பருகிப் பாவையர்கள் புடைசூழ, பட்டு மெத்தையிலே புரளும் புரோகித எத்தர்களையும் கண்டு கலங்கி அவர்களின் ஆணவச் செயலை அடியோடு ஒழிக்க உலகிற்கு வழி காட்டியவர் வால்டேர். ரூசோவோ, தன் உள்ளத்தின் ஒளியிலே உண்மைக் கடவுளைக் காணுபவர். அவர் நம்பிக்கையின் மீது அமர்ந்திருப்பவர் நம்பிக்கையோடு, நல்வாழ்வுக்கு வழி காட்டுபவர்.

வால்டேர் அரசியல் துறையிலே, செல்வர்களின் அரசியலை ஆதரிப்பவர். நேர்மையுள்ள பிரபுக்களின் பண ஆட்சிக்குப் பக்கபலம் தேடுபவர். மக்களைப்பற்றி, ஏழைஎளியவர்களைப்பற்றி அதிகம் கவலைப் படாதவர். ரூசோ மக்கள் ஆட்சிக்கு, குடி அரசுக்கு வித்து ஊன்றினவர். "மன்னன் மாநிலத்தின் மகேஸ்வரனின் பிரதிநிதி" என்ற மடமையைத் தீயிட்டுப் பொசுக்கினவர். மக்களின் ஆட்சியே மலர வேண்டும், மக்களே அரசியலை நடத்த வேண்டும் என்ற புதுமைக் கருத்துக்களைப் புவியிலே முதன் முதலாகப் பரப்பிய புரட்சி வீரர்.

இவ்வளவு துறைகளிலும் வேறுபட்ட நோக்குடைய இம்மாபெரும் எழுத்தாளர்கள், முன்னேற்றக் கருத்துக்களையே நாட்டிலே நடமாடச் செய்தனர். இயற்கையோடு இசைந்த, அறிவுக்குப் பொருத்தமான மதத்தைப் பரப்பினார்கள். மதச் சண்டைகளை வன்மையாகக் கண்டித்து மத வெறி அகல, மக்களுக்கு உண்மைக் கடவுளின் தத்துவங்களை எடுத்துக் கூறினார்கள். செல்வர்களின் அநியாய அட்டகாசங்களை அம்பலப் படுத்தினார்கள். மக்களுக்கு அதிக உரிமைகள் அளிக்கப் பட வேண்டுமென்று வலியுறுத்தினார்கள். உலகங் கண்டு வியந்த 1789—புரட்சிப் பாதைக்குப் பாமர மக்களை அழைத்துச் சென்றார்கள்.

வால்டேர் பழைய அரசாங்கத்தின் கொடுங்கோன்மையை அம்பலப் படுத்தி அழித்தார். ரூசோ புதிய வருங்கால சமுதாயத்தின் நல்வாழ்வுக்கு ஒப்பந்தம் தீட்டினார். வால்டேரின் அழிவு வேலை, ரூசோவின் ஆக்கப் பணியினால் முற்றுப் பெற்று ஒரு பெரிய சமுதாயத்தையே தோற்றுவித்தது.

அவர்களின் வேற்றுமைகளுக்கிடையிலே ஒற்றுமை கண்ட மக்

கள், அவர்களைத் தம் வரலாற்றறிவில் ஒன்று சேர்த்துக் கருதத் தவற வில்லை. வால்டேரையும் ரூசோவை யும் பிரித்துக்கூடப் பேசுவதில்லை உலகம். வால்டேர்—ரூசோ என்று சேர்த்துத்தான் வழங்குகிறோம். வழங்குவதுதான் பொருத்தமுங்கூட.

அவர்களின் வேற்றுமைகளேகூட, அவர்களின் ஒப்பற்ற எழுத்துக் களிலே தோய்ந்து கிடக்கும் உயர்ந்த கருத்துக்களுக்கிடையிலே ஒற்றுமை காண நேரும்போது, உடனடியாக மக்கள் அதைப் பின்பற்றவும், பரவச் செய்யவும் ஏதுவாயின என்றும் கருதலாம். என்றாலும், தங்களுக்குள் வேறுபட்டு, உள்ளன்புக்கு இடமற் றுப் பிரிந்திருந்த வால்டேரும் ரூசோ வும் அந்நாட்டு மக்களை 1789—புரட் சிக்குத் தயாராக்கி, உரிமையடைந்து புதுவாழ்வு பெறச் செய்தனர் எனில் —அவர்கள் மட்டும் ஒன்றுபட்டிருந் தால்......! என்ற எண்ணம் தோன் றாமலில்லை.

அவரது சீடர்களுக்கு

"இந்தியாவின் மிகப் பழமையான இனம் நாம் அறிந்துள்ள வரையில் திராவிட இனமாகும். பின்னர்தான் ஆரியர் இங்கு வந்த னர். கிழக்கிலிருந்து மங்கோலியரும் புகுந்தனர்.

இன்றுங்கூடத் தென்னிந்தியாவில் வசிப்பவர்களில் பெரும்பா லோர் திராவிடர்களின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள். மிகப் பழங்காலமுதலே, திராவிடர்கள் இந்தியாவிலேயே வசித்திருப் பதால் அவர்கள் வடஇந்தியர்களைவிடக் கறுப்பாக இருக்கிறார்கள். அயல் நாட்டவர்களோடு பெருமளவில் வாணிபம் செய்தும், தங்களுக் கென சிறந்ததொரு தனி மொழியைக்கொண்டும், உயர்ந்ததொரு நாகரீகத்தை உடைய மக்களாக திராவிடர்கள் விளங்கினார்கள்.

தம் மகளுக்கு எழுதிய கடிதத்தில்—

—பண்டித ஜவகர்லால் நேரு.

தொடர் கதை:

[முன்பு:— மாதவனும் மூர்த்தியும் ஒரு நாள் மாலை உலாவச் செல்கிறார்கள். மாந்தோப்பில் இலக்கியப் பித்தனைச் சந்தித்து, அவன் தந்த "பொற்சிலை" என்ற கையெழுத்துச் சுவடியைப் பெற்றுக் கொண்டு, வீட்டிற்கு வந்து வாசிக்கிறார்கள்.

இலக்கியப் பித்தன் காட்டில் இருக்கும் பொழுது பொற்சிலை என்றொரு அழகிய கன்னியைச் சந்திக்கிறான். ஆத்திரத்தோடு ஆரம்பத்தில் பேசியவள், முடிவில் இசைந்து அவனது அணைப்பில் சாய்கிறாள். அவளோடு, அவளது தகை இல்லத்திற்குச் செல்கிறான். சீர்திருத்த நோக்கங் கொண்ட பொற்சிலையின் பாட்டனைக் கண்டு பேசும பொழுது "பாரதிதாசனின் நூல்கள் காட்டில் நிலைக்காது! அழிந்து விடும்!" என்று அவர் கூற, அவனுக்குக் கோபம் வருகிறது. பிறகு........]

"எம் புரட்சிக் கவிஞரது உயிர்ப் பண் நிலைக்காதா?" என்று நாக்குழறக் கேட்டேன். என் நெஞ்சத்தில் புகைய ஆரம்பித்த கோபக் கனலைக் குறிப்பால் அறிந்து கிழவர் குறுநகை செய்தார். மையிருட்டில் வழி தவறிய குழந்தையைப் போல ஒன்றும் புரியாமல் திகைத்தேன்.

"தமிழன் ஆத்திரம் கொள்ள பயிற்சி பெற்றிருக்கிறான், ஆனால் அறிவை வளர்க்கப் பழகிக் கொள்ளவில்லை" என்று சாந்தமான குரலில் பேசலானார்.

அவர் ஏதோ கூற வாயெடுத்தார், அதற்குள் யாரோ வரும் சப்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தார்; சுமார் முப்பது வயதுடைய ஒரு குள்ளமான மனிதன் அறையினுள் வந்தான்.

"ஐயா நேரமாகிறது சாப்பிடவில்லையா?" என்று கூறிவிட்டு என்னை ஆச்சரியத்தோடு விரிந்த கண்களால் பார்த்தான்.

"வாலி, பேசிக்கொண்டே இருந்து விட்டோம், சரி வருகிறோம். நீ போ." என்று அவனுக்குக் கூறிவிட்டு, என்னைப் பார்த்து, "தம்பி! சாப்பிட்டு விட்டுப் போகலாம்! எழுந்திரு" என்றார்.

"ஐயா இவர் யார்?" என்று வாலி என்னைச் சுட்டிக் காட்டிக் கேட்டான்,

"விருந்தினராக வந்திருக்கிறார். இவரைப் பற்றிப் பிறகு சொல்லுகிறேன். நீ போய் தயாராய் இரு!" என்று கூறி அவனை அனுப்பினார்.

"இவர் யார்?" என்றேன்.

"இவன் தான் இந்த வீட்டில் சகல வேலைகளையும் கவனித்துக் கொள்பவன். மிகவும் கெட்டிக்காரன். அடிக்கடி வெளியூர்களுக்குச் சென்று வந்து நாட்டின் நிலவரங்களை எனக்குக் கூறுபவன் இவன் தான். இவன் வரலாறு சுவைமிக்கது. கூடுமானால் பிறகு சொல்லுகிறேன்!" என்று கூறிகொண்டே எழுந்தார். நானும் எழுந்தேன். இருவரும் பொற்சிலை படுத்திருந்த அறைக்குச் சென்றோம்.

நாங்கள் வருவதை அறிந்ததும் பொற்சிலை எழுந்து உட்கார்ந்தாள்.

"எப்படிக் குழந்தை உடம்பு இருக்கிறது?"

இப்பொழுது சவுக்கியமாக இருக்கிறது தாத்தா!"

"சாப்பிடலாமா, பொற்சிலை?"

"சரி தாத்தா!"

கிழவர் முன் செல்ல, அவருக்குப் பின் பொற் சிலையும், அவளுக்குப் பின் நானுமாக நடந்தோம். மெதுவாகப் பொற்சிலை யின் நீண்ட கூந்தலின் நுனியைப் பிடித்தேன். திரும்பிப் பார்த்துப் புன்னகை செய்தாள்!

வாலி சோறு படைக்க, மூவரும் உண்ணத் தொடங்கினோம் சுவைமிக்க விருந்து!

இரவு நானும் பெரியாரும் ஒரு அறையிலும், பொற்சிலை தனி அறையிலும் படுத்துக் கொண்டோம்.

"பொழுது புலர்ந்துவிட்டது எழுந்திரு தம்பி!" என்று கிழவர் எழுப்பியதும், தூக்கம் கலைந்து கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தேன்.

"தாத்தா! காலை உணவு தயாராகி விட்டது!" என்று கூறிக் கொண்டே அன்ன நடை நடந்து பொற்சிலை உள்ளே வந்தாள்.

நானும் கிழவரும் குகை இல்லத்தை விட்டு, வெளியில் சென்று காட்டாற்றின் தெளிந்த நீரில் குளித்துவிட்டுத் திரும்பினோம். பொற்சிலையின் பொற்கரங்கள் பரிமாறிய சுவை உணவை உண்டோம்.

"தம்பி, நானும் வாலியும் வெளியே சென்று சில மூலிகைகள் பறித்துக்கொண்டு விரைவாக வந்து விடுகிறோம். அதுவரைக்கும் இங்கேயே நீ இரு!" என்று கிழவர் கூறிவிட்டு, என் பதிலை எதிர் பார்த்தார்.

"சரி செய்யுங்கள்!" என்று சுருக்கமாகப் பதிலளித்தேன்.

கிழவரும் வாலியும் வெளியே சென்றுவிட்டார்கள். நானும்

பொற்சிலையும்தான் குகையில் இருந்தோம்!

குகை இல்லம் நல்ல ஓவிய வேலைப்பாடுகள் நிறைந்த ஒரு சிறப்ப இல்லம். அதன் கலையழகு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. பற்பல நடைச் சிலைகள் அங்கு உயிரோவியங் களைப் போல் நின்றிருந்தன. நடனத்தைப் பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியாது. ஆகவே பொற் சிலையைப் பார்த்து "நட னம் உனக்குத் தெரியுமா?" என் றேன்! "ஓ! தெரியுமே!" என்று மகிழ்ச்சி நிறைந்த குர லில் பதிலளித்தாள்.

"அப்படியானால் ஆடு பார்க்க லாம்!"

"ஊஹூம், இப்பொழுது வேண்டாம்! வெட்கமாக இருக் கிறது!"

"வெட்கமாக இருக்கிறதா! அப்படியானால் வேண்டாம்! நான் போகிறேன்!"

"பார்த்தீரா, கோபித்துக் கொண்டீரே! ஆடுகிறேன் நான்!"

"பார்க்கிறேன் நான்!"

"பார்க்கத்தான் தெரியுமா? ரசிக்கத் தெரியாதா?"

"கண்ணே! நீ ஆடினால் நன் றாக ரசிக்க எனக்குத் தெரியும்!"

கொடி இடையாள் ஆடத் தொடங்கினாள்! என் உடல் காற்றில் மிதக்கத் தொடங்கி யது! ஒவ்வொரு ஆட்டம் முடிந்ததும், இது "ஹம்ஸ நட னம்!" "இது அஜபா நடனம்" "இதுதான் புயங்க நடனம்" என்று ஏதேதோ அவள் சொன்னாலும் எனக்குப் புரிய வில்லை. கலையின் நுட்பத்தை அறிந்து தெரிந்து நான் ரசிக்க வில்லை! அவளது சிற்றிடை துவ ளுவதையும், உடல் நெளிவதை யும், நீண்ட கண்கள் சுழலு வதையும், என்னை அணைத்த கைகள் அசைவதையும், நன்கு கண்டு இன்புற்று என்னை மறந் தேன்! அழகு, அழகு, மிக அழகு அவள் நடனம்!

ஆடி முடிந்ததும் ஆடலழகி என் அருகில் வந்து நின்றாள். மையுண்ட கண்களால் என் இதயத்தைத் துளைத்து விட்டு, அதற்கிடும் மருந்து போல் என் மார்பில் சாய்ந்தாள்.

"உடல் வலிக்கிறதா?" என்று கூறிக்கொண்டே அவளது நீண்ட, பூவினும் மென்மையான தோள்களைத் தடவினேன்.

"பாரதிதாசனின் நூல்கள் நாட்டில் நிலைக்காது! அழிந்து விடும்!" என்று கிழவர் கூறிய வார்த்தைகள் ஏனோ என் காது களில் வந்து ஒலித்தன. களிப் பால் விரிந்த என் இதயம் வருத் தத்தால் சுருங்கத் தொடங் கியது.

"பொற்சிலை?"

"ஏன் அத்தான்?"

"உன் தாத்தா, நான் ஏமாற் றம் அடையும்படி ஏதேதோ பேசுகிறாரே?"

"என்ன அப்படி ஏமாற்றம் அடைந்துவிட்டீர்?"

"அவர் சீர்திருத்தச் செம்மலாக இருப்பார் என்று நினைத்தேன். ஆரம்பத்தில் ஏதேதோ பேசி நான் நினைத்தது சரி என்று நம்பும்படிச் செய்தார்! கடைசியில் நான் ஏமாற்றமும் வருத்தமும் அடையும்படி ஒன்றைக் கூறினார்...... என் உயிர் போன்ற கவிஞரின் உள்ளப் பிழிவு அழிந்துவிடுமாம்!"

"என்ன சொல்கிறீர்?"

"பாரதிதாசனின் நூல் அழிந்து விடுமாம்!"

"இதுதானா? இதற்கா கவலைப் படுகிறீர்?.....ஏன் அழிந்து விடுமென்று கேட்டீர்களா?"

"இல்லை!"

"கேளுங்கள், தக்க காரணம் சொல்லுவார்?"

கிழவரும் வாலியும் உள்ளே வரும் ஒலி கேட்டு நாங்கள் பிரிந்தோம்.

இருவரும் உள்ளே வந்ததும் அவர்களின் அருகே நான் சென்றேன். தான் கொண்டு வந்த பற்பல இலைகளையும் செடிகளையும் மலர்களையும் கீழே வைத்துவிட்டு வாலி தன் வேலையைக் கவனிக்கச் சென்றுவிட்டான்.

கிழவரும் நானும் உட்கார்ந்தோம். அவர் ஒரு நீல நிறமுடைய மலரை எடுத்து, "தம்பி! இதன் பெயர் தெரியுமா?" என்றார். "தெரியாது" என்றேன். அதன் பிறகு ஒவ்வொன்றாக எடுத்து அதன் பெயர், கவிஞர் அதை உவமைக்குப் பயன்படுத்தியது முதலிய விவரங்களைக் கூறத் தொடங்கினார்.

"தம்பி! நீலநிறமாக இருக்கும் இந்த மலரின் பெயர் கருவிளை. மயிலின் தோகைக்கு இதனை உவமையாகக் கூறுவார்கள்... இதுதான் காந்தள் மலர்! எவ்வளவு இனிமையான மணமிருக்கிறது பார் இதற்கு! மலையின் அருகில், அருவியின் பக்கத்தில் இச்செடி செழுமையாக வளரும். தலைவன், தலைவிக்கு அன்போடு அளிக்கும் பொருள்களில் இதுவும் ஒன்று! நீண்ட காம்போடு இருக்கும் இம் மலரை, படம் விரித்த பாம்பிற்கும், கை விரலுக்கும் ஒப்பிடுவார்கள். வெண்காந்தள் செங்காந்தள் என இம்மலரில் இருவகை உண்டு. இரத்தத்தைப் போன்ற நிறத்தை உடையதால் செங்காந்தளைக் குருதிப்பூ என்றும் கூறுவர். சேவலின் கொண்டைக்கு இதனை உவமையாகச் சொல்வார்கள்............மலைச் சுனையில் மலரும் இம்மலரின் பெயர் குவளை என்பது. கருங்குவளை, செங்குவளை என்று இதிலும் இருவகை உண்டு. கருங்குவளை மலரை மங்கையரின் கண்களுக்கு உவமையாகக் கூறுவதை நீ அறிந்திருப்பாய்! இம்மலர் மிகவும் மென்மை வாய்ந்தது. இதன் மீது தேன் உண்ணவரும் வண்டு உட்கார்ந்தால், உடனே இது கசங்கி விடும்......தாமரை இலையைப்

போலப் பெரியதாக இருக்கும் இந்த இலையின் பெயர் சேம்பு! யானையின் காதிற்கு இதனை ஒப்பிட்டுக் கூறுவார்கள்.....கருத்த நிறமுடைய இப்பூவின் பெயர் மலைநொச்சி என்பது! இம்மலர் நடுஇரவில் தான் உதிரும்......''

அவர் இப்படிக் கூறிக் கொண்டே வரும்பொழுது, 'பாரதிதாசனின் நூல்கள் நாட்டில் நிலைக்காது! அழிந்து விடும்!'' என்ற வார்த்தைகள் நினைவிற்கு வரவே என் முகம் வாடியது இதனை அறிந்த கிழவர், ''ஏன் தம்பி மலை நிலத்து மலர்களையும் செடிகளையும் பற்றி நான் கூறுவதைக் கேட்க உனக்குப் பொறுமை இல்லையா?'' என்று சிறிது கோபமாகவே கேட்டார்! நான் பேசாமலிருப்பதைக் கண்ட அவர், ''இன்றைய தமிழன் தன்னாட்டின் வளப்பத்தைப் பற்றிக் கூட அறிந்து கொள்ள விரும்புவதில்லை!'' என்று சோகமும் வெறுப்பும் கலந்த குரலில் கூறினார்.

என் நிலைமையை எப்படி விளக்குவது என்றே எனக்குப் புரியவில்லை. ஆகவே மௌனமாகவே இருந்தேன்!

''என்ன தம்பி யோசிக்கிறாய்?''

''என்னைத் தவறாக எண்ணிக் கொள்ளக்கூடாது!...''

'' நடுக்கங் கொள்வது ஏன், தைரியமாக மனதில் உள்ளதைச் சொல் ! ''

''பாரதிதாசனின் நூல்கள்..''

'' ஓகோ ! அதுவா !'' என்று கூறிச் சிரித்தார்.

'' தம்பி ! அவ் வார்த்தைகள் உன் உள்ளத்தைப் புண்ணாக்கி விட்டன போலிருக்கிறது ! கவலைப் படாதே ! விவரமாகச் சொல்கிறேன். அதன் பிறகு நான் கூறியது சரியென்று நீயே கூறுவாய் என்று தம் பேச்சைத் தொடங்கினார்

''செங்கதிரை நாழிகைகள்,
மேற்கில் தள்ளும்
செயல் போலே, ஆரியர்கள்,
தமிழர் வாழ்வில்
பொங்கு தமிழ்க் கலைச் செல்வம்
மறையும் வண்ணம்
புனை சுருட்டுச் செய்துவந்தார்.
ஐயகோ நம்
மங்காத தமிழ் மறவர் வரலா
றெல்லாம்
மங்கும் வகை செய்தார்கள்:
வையங் கண்ட
தங்கத்தை இரும் பென்று
சொன்னார்.........''

'' பெரியாரே ! புரட்சிக் கவிஞரின் பாடல் அல்லவா இது? ''

'' ஆமாம் ! ஆமாம் ! புரட்சிக் கவிஞரின் இதயத்திலிருந்து சிந்திய இரத்தத் துளிகள் இவை ! இதன் பொருள் என்ன ? தமிழ் மறவர் வரலாற்றுச் சுவடிகள் எவை எவை? தமிழ்க் கலைச் செல்வ ஏடுகள் என்னென்ன ? அவைகள் எல்லாம் இப்பொழுது எங்கே ?.....மறைந்து விட்டன! ஏன் மறைந்துவிட்டன? யாரால் மறைக்கப்பட்டுவிட்டன? இவை

யெல்லாம் நீ அறிந்த ஆண்டா தம்பி ?......'' என்று ஆவேசம் வந்தவரைப் போல் பேசினார்! அவர் கூறியவற்றை ஆவலோ டும் ஆர்வத்தோடும் கூர்மையா கக் கேட்டுக்கொண்டிருந்தேன்.

"தம்பி! தமிழர்கள் நிலை கெட்டவர்கள்! தங்கள் செல் வத்தை வைத்துக் காப்பாற்ற வகையற்றவர்கள்! கடவுள் என்ற பெயரால் எத்தகைய புளுகு களைக் கட்டிவிட்ட போதிலும் அத்தனைக்கும் கன்னத்தில் போட்டுக் கொள்ளும் கயமை மிக்கவர்கள்!......"

"தமிழர்கள் நல்லவர்கள்! வேற்று இனத்தான் விஷ வித்தை அவர்கள் உள்ளத்தில் தூவிவிட்டான்!'' என்று தமி ழர்கள் சார்பில் நான் வாதாட ஆரம்பித்தேன்.

"அன்னியன் விஷ வித்தைத் தூவினான்! உண்மைதான்! அன்னியனுக்கு இடமளித்தது தமிழனின் தவறு அல்லவா ?''

"பரந்த உள்ளம் தமிழர் உள்ளம்! ஆகவே......''

"ஆமாம்! கடவுள் வேடத்தில் வந்த கயவனொருவன், 'பக்தா! உன் பக்திக்கு மெச்சினேம்! அழகிய உன் மனைவியை அடைய வேண்டுமென எமக்கு நீண்டநாள் ஆசை! சிவபக்தா, சிற்றிடையாளைக் கொடு! எமக்கே சொந்தமாக என் றென்றைக்கும் இருக்கும் படிக் கொடு!'' என்று கேட்க; பக்தி யினால் உள்ளம் பரந்து விரிந்து விட்டதினால் "ஸ்வாமி! சகலமும் உம்முடையது அல்லவா! அப்படி இருக்க, மாண்டு மண்ணாகிப் புழுவாகப் போகும் மனைவி யைத் தரவா மறுப்பேன்?' என்று கூறித் தன் மனைவியை அக்கயவனோடு கூட்டி அனுப்பிய இயற்பகை நாயனாரின் உள்ளத் தைப் போல் விரிந்த உள்ளம் தமிழர் உள்ளம்! அப்படித் தானே? பரந்த உள்ளமாம் பரந்த உள்ளம்! சீர்திருத்தக் காரனென்று கூறிக்கொண்டு, வெட்கமும் அறிவுமின்றி நீயும் இப்படிக் கூறுகிறாய்!'' என்று கோபமும் ஆத்திரமும் கலந்த குரலில் கூறினார்.

"தம்பி! கவலைப்படாதே! நம் நாடு அழிந்து கொண்டு வரு வதை நினைத்து நினைத்து என் புண்பட்ட உள்ளம், ஏதேதோ கோபத்தால் கொட்டுகிறது! வருத்தப் படாதே!.........நம் நாடு விநாடிக்கு விநாடி அழிவை நோக்கி ஓடிக்கொண்டே இருக் கிறது....'' என்று கூறியதும் அவர் கண்களில் நீர்த் துளிகள் தோன்றின. வெண் தாடியில் சிந்திய கண்ணீரைத் துடைத் தார்! என் நெஞ்சம் வேதனை யால் விம்மியது! என் கண்கள் நீர் ஊற்றாயின!

(தொடரும்)



மை இருட்டு! புலியின் உறுமல். கோட்டானின் கூவல். ஆந்தையின் அலறல். ஓநாய்களின் ஓலம். பாம்பின் வாயில் சிக்கிய தவளையின் கத்தல். இவற்றோடு வேறுபல பயங்கர ஒலிகள். அடர்த்தியான காடு. வானளாவிய மரங்கள் நீண்ட கிளைகள். பெருங் கிளைகளில் அங்கங்கும் ஓரிருவர் உட்கார்ந்திருக்கின்றனர். ஏதோ பேசுகின்றனர். இல்லை ஒலிச்சைகை செய்கின்றனர். தூக்கம் வருகிறது போலும்! சிலர் கிளைகளில் சாய்கின்றனர்.

தழைகளினிடையே எவையோ தெரிகின்றன. ஆமாம்! அவர்கள் அவைகளைப் பல்லாண்டுகளாகவே நாள்தவறாமல் பார்த்திருக்கின்றனர். அன்றும்தான் அனைவரும் பார்த்தனர். ஆனால் ஒருவன் மூளையில் மட்டும் அபூர்வமாக சிந்தனைக்கோடு படரத் தொடங்கியது. அதுதான் "அவை யாவை?" என்ற கேள்வி. சிறிது ஆழ்ந்து சிந்திப்பவன் போல் காணப்பட்டான். வானமண்டலத்தில் சஞ்சரித்த அவன் மூளை மரக்கிளைக்கே வந்துவிட்டது. மின்மினிப் பூச்சிகள் பறந்து கொண்டிருந்தன. 'இவை போன்றவையே அவைகள்'. முதலில் இது கூட அவனுக்குத் தோன்றவில்லை. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் அளவு கூட அவனுடைய அறிவு விரிவடைந்திருக்கவில்லை.

ஆனால் இவை இரண்டையும் நாள்தோறும் இரவில் கண்டு கண்டு, மின்னுவதில் ஒன்றோடொன்று ஒத்திருப்பதை உணர்ந்துவிட்டான். இவை மரத்திலிருக்கும் மின்மினிகள்; அவை எட்டாத வானில் உலவும் மின்மினிகள். ஆனால் அதற்குள் அவன் சிந்தனையை வேறொன்று கவர்ந்துவிட்டது! அடிவானத்தில் மங்கலான ஒளியோடு தோன்றிக் கொண்டிருந்த ஓர் குளிர்ந்த ஒளி வடிவம் அது. சிந்தனைக்கோடு வளரத்தொடங்கியது. "அது

என்ன ?'' என்ற கேள்வி உடனே தோன்றிவிட்டது. விண்மீனுக்கு மின்மினி. ஆனால் இவ்வொளிக்கு மின்மினி ஒப்ப வில்லை. ஒப்பாக வேறொன்றை யும் கூடக் கண்டதில்லை. அது "இதைப் போன்றது'' என்று கூற எதைக் கண்டான் அவன்? ஆகவே "அது அதுதான்'', அவ் வளவு தான் அவனதுமுடிவு.

சிறு வியர்வைத் துளி அவன் நெற்றியில் அரும்பிற்று. சிந் தனையில் மூழ்கிவிட்டான் போலும்! இல்லை, நாள் முழு வதும் சுற்றியலைந்த களைப்பு அவனை உறக்கத்தில் ஆழ்த் திற்று.

பறவைகள் ஒலிக்கத் தொடங்கிவிட்டன. அவைகள் அங்குமிங்கும் பறந்து உட் காருவதால் "சலசல' வென்ற ஓசை உண்டாகிறது. அவன் செவியிலும் அவ்வொலி நுழை யாமலில்லை. அவன் விழித்து விட்டான். அடிவானத்தில் வெண்மையான ஒளி தோன்று வதைக் காண்கின்றான். இருட் டுடன் பயமும் பறந்தோடு வதைப்போல் தோன்றுகிறது அவனுக்கு. ஆ! செந்நிற ஒளிக் கதிர்களைப் பரப்பிஎழும் வட்ட மான ஓர் ஒளிப் பிழம்பின் விளிம்பு தெரிகிறது! அதன் அழகில் அவன் மயங்குகிறான். இன்பமுறுகிறான். எழுச்சியும் பெறுகிறான். அவ்வட்ட வடிவ மான ஒளிப் பிழம்பு மேலே எழுகிறது. நாள்தோறும் விடியலில் கண்டு இன்புற்றது தான். ஆனால், அன்று......... தோன்றியது, "அது யாது?'' என்ற கேள்வி. அவன் மூளை யில் தோன்றிய முதல் புரட்சி அதுதான்! அக் கேள்வி தோன்றுமுன் பற்பல ஆயிரம் ஆண்டுகள் உருண்டோடின.

தண்ணீரைக் கண்டான். தாகமெடுத்த போதெல்லாம் குடித்தான். ஆனால் அது சில மூலப் பொருள்களின் சேர்க்கை என்பதை யறியான். கற்களைக் கண்டான். தன்னை எதிர்த்துத் தாக்க வரும் விலங்குகளின் மீது வீசி எறிந் தான், ஆனால் அவை பாறைகள் வெடிக்கும் போது சிதறிய சிறு துண்டுகள் என்பதைஅறியான். மலையைக் கண்டான். அதில் ஏறிச் சுற்றிப் பார்த்தான். ஓர் பரந்த உலகமே தெரிந்தது போலிருந்தது. அவ்வளவுதான் அவனறிந்த உலகமே கூட. ஆனால் அம்மலை திடீரென்று பூகம்பத்தால் மேலெழுந்தது என்பதை அறியான். அதைப் போன்றே அவன் வானத்தை யும் அண்ணாந்து பார்த்தான். பார்த்துக் கொண்டே இருந் தான். அதற்கு மேல் அவன் அறிந்திருந்தது ஒன்றுமில்லை.

காலையிலிருந்து ஒளிபரப்பி மாலையில் மறையும் ஞாயிறும், அந்திப் போழ்தில் தோன்றித் தண்ணொளி வீசும் திங்களும் இரவெல்லாம் மின்னும் மீன் களும் அவன் பிறந்ததிலிருந்து நாள்தோறும் கண்டவை. ஆகவே வானமண்டலத்தில் உலவும் இவைகள் முதலில் அவன் மனத்தில் வியப்பைக் கூடத் தரவில்லை. எப்படி வியப்பான்? அவன்தான் சிந் தித்ததே யில்லையே!

அறிவியல் நன்கு வளர்ந்துள்ள இவ் விருபதாம் நூற்றாண்டில் கூட வானமண்டலத்தில் தோன்றி வெண்சுடர்பரப்பும் ஞாயிறைக் குறித்தோ, தண்ணொளி விரிக்கும் வெண்மதி பற்றியோ, இரவெல்லாம் கண் இமைத்து இவ்வுலகை எள்ளி நகையாடுவது போன்று தோன்றும் விண் மீன்களைப் பற்றியோ நம்மில் எத்தனை பேர் சிந்திக்கின்றனர்?

நம் நிலையே இப்படி இருக்கும் போது பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதன், வானமண்டலத்தைக் கண்டு சிந்தித்திருப்பான் என்று கருதுவதே கூட, நாம் அவர்களைப் பற்றிச் சரியாகச் சிந்திக்கக் கூடவில்லை என்பதையே காட்டும். எனவே அவர்கள் சிந்திக்கவில்லை என்பதைவிட, சிந்திக்கக்கூடவில்லை என்பதே பொருந்தும்.

பகல் முழுவதும் அங்குமிங்கும் அலைந்து ஏதேனும் கிடைத்ததைத் தின்று, எதிர்த்த விலங்குகளோடு போராடிப் பிழைத்து, இரவிலே மரக்கிளையிலோ, குகையிலோ, பாம்பிற்கும் பல்லிக்கும் நடுவிலே உறங்கி உயிர் வாழ்ந்த நிலையிலே எப்படி அவனால் சிந்திக்க முடியும்? சிந்தனையே தோன்றமுடியாத நிலையிலே அவர்களது அறிவு இருந்தகாலம் அது.

இந்நிலையிலே அவன் மூளையிலே தோன்றும் கேள்வி பாலைவனத்திலே பூத்தமலரேயன்றோ? பல்லாண்டுகள் வரை, அவன 'சிந்திக்கிறோம்' என்பதையே அறியாமலும் சிந்தித்துக் கொண்டிருந்தான். ஆனால் முடிவு . . . . ? அவன் காணவில்லை. அவனால் காண முடியவில்லை. கேள்வி தோன்ற எவ்வளவோ ஆண்டுகள் உருண்டன. இப்போது அவனுக்கு அக்கேள்வி எளிதாகிவிட்டது. ஆனால் பதில் சொல்ல முடியாத புதிராகவே இருந்தது.

* * *

இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தான், பாபிலோனியாவில் உள்ள சால்டியா என்ற ஊரின் வீட்டு மாடிகளில் வாய்பிளந்து படுத்திருந்த சிலருடைய மூளையில் வானத்தைப் பற்றிய ஆராய்ச்சி எழுந்தது. வானத்தில் உலவும் பொருள்களைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத்தொடங்கிய முதல் மனிதர்கள் அவர்களே என்றாலும் "அவையாவை" என்ற அக்கேள்விக்குச் சரியான, தெளிவான விடை அவர்களாலும் காண முடியவில்லை.

ஆண்டுகள் நாட்களாக உருண்டன. விண் மீன்களின் ஒளிமாறுதலையும், சந்திரனின் உருவமாறுதலையும், சூரியனின் இடம் பெயர்தலையும், வால் மீன்களின் தோற்றத்தையும், கோள்களின் நிலையையும், மற்ற வான மண்டலத்தில் ஏற்படும் எல்லா மாற்றங்களையும் கூர்ந்து கவனித்து வந்த மனிதன், அம்மாற்றங்களுக்கும் தனக்கும் தான் வாழும் உலகிற்கும் சம்மந்தமில்லா

மலா இருக்கும்? என்று எண்ணத் தலைப்பட்டான். நாளடைவில் அவ்வெண்ணமே அவனின் முடிவாக மாறியது. சில சுயநலமிகளும் அவனுடன் சேர்ந்தனர். தங்கள் மனக்கோட்டையை வானமண்டலத்திலேயே கட்டத்தொடங்கினர். அவர்கள் கட்டும் அக் கட்டிடத்திற்கு அடிவாரமே இல்லை என்பது அவர்களுக்கே தெரியாது. எனினும் மிக அழகாகக் கட்டி முடித்து விட்டனர், பிறர் நம்பும்படியாக.

ஆகவே வான மண்டலத்தில் சஞ்சரிக்கும் உருவங்களினுடைய இட மாற்றத்தைக் கொண்டு மக்களின் தலைவிதியைக் கூற ஆரம்பித்தனர். நடந்த, நடக்கிற, நடக்கப் போகும்வாழ்வின் நிலையை வருணித்தனர். மனிதனின்வாழ்வில் ஏற்படும் இன்ப துன்பங்களைக் கண்டு அறிவிப்பதற்கு ஏற்ற வாறு அவை காட்சி தருகின்றன என்றனர்.

ஆனால் நாளடைவில் அவற்றை வான உருவங்கள் என்று சொன்னால் தாங்கள் சொல்லும் 'ஜோசியத்தை' மக்கள் நம்புவார்களோ என்ற ஐயம் தோன்றவே 'வான மண்டல உருவங்கள், 'கடவுளின் அம்சங்கள்' என்று கற்பித்தனர். ஆனால் நம் நாடோ அத்துறையில் ஒருபடி உயர்ந்தே இருந்தது. அவ்வான மண்டல உருவங்களே கடவுள்கள் என்று தருமோபதேசம் செய்து, "நாளை சூரியபகவான் தோன்றாமல் இருந்தால் என்ன செய்வீர்கள்?" என்று கூறி அதன் மகத்துவத்தை அறிவுறுத்தினர்! மக்கள் நம்பினர், ஆட்டு மந்தையாக இருந்த காரணத்தினால். ஆனால், மக்களின் தலைவனாகிய மன்னனும் மதக் குருக்களுக்கு மண்டியிட்டான்! மன்னாதி மன்னர்கள் தாங்கள் அணிந்திருந்த முடியை, மதக் குருக்களின் தயவில், காப்பாற்றிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. வேட்டையாடப் புறப்பட நல்ல நாள் பார்த்துச் சொல்லுகின்றது முதல், அந்தப்புறத்திற்குச் செல்ல சரியான நேரம் பார்த்துக் கூறுகின்ற வரையில் குருமார்கள் கையிலிருந்தது ஆதிக்கம்.

அரசன், ஜோசியமு மறிந்த இம்மதக் குருக்களின் சக்தியைக் கண்டு அஞ்சுவதற்கு அவ்வப்பொழுது வால்மீன்கள் தோன்றிக் கொண்டுதான் இருந்தன. ஜோசியமே வான நூல்—என்று கருதுகிற நிலை கூட ஏற்பட்டுவிட்டது. ஜோசியத்தினால் பயன் பெற்ற அச் சூது நெஞ்சத்தினர் மக்கள் அறியாமையை வளர்த்து மகிழ்ந்தனர். இங்கிலே இற்றைக்கு ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகள் முன் வரையில், வான அறிவியல் வளரத் தொடங்கிய பிறகுங் கூட, அனேகமாக எல்லா நாடுகளிலும் பரவித் தலைவிரித்து ஆடிக்கொண்டிருந்தது ஆனால் அதற்குப் பின் பல மேலை நாடுகளிலும் ஆடிய ஆட்டம் தடைப்பட்டு ஓடத் தொடங்கிப் பல்லாண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் நம் நாட்டிலோ........

'ஜோசியத்தின் மகிமை' சொல்லத் தேவையில்லை.

கோடிக் கணக்கான மைல்களுக்கப்பால் உலவும் வான உருவங்களின் இடமாறுதலுக்கும், அவ்வுருவங்களோடு உருவத்தில் ஒரு சிறிதும் ஒப்பிடமுடியாத, ஒரு சிறு புள்ளி அளவுமில்லாத மனிதனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளின் மாறுதலுக்கும் தொடர்பு காணும் அறிவைக் குறித்து, நாம் என்னென்று எண்ணுவது?

அங்கிலையில் வாழ்ந்த மனிதனின் மூளையில் வான நூல் அறிவு தோன்றுவதற்கான அறிகுறிகள் தென்படாமலில்லை.

* * *

அலெக்ஸாண்டிரியா எகிப்தின் தலைநகர். அது மட்டுமல்ல. அறிவியல் அரும்பிய நகரும் அதுதான். கணித நூல் அறிஞர் 'யுக்ளிடு,' பொருளியல் நூல் அறிஞர் 'ஆர்க்கிமெடீஸ்,' முதலியவர்கள் தோன்றியதும் அங்கேதான். அந்நகரத்தில் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில், டாலமி என்ற அறிஞன் வாழ்ந்தான். அவன் பல இரவுகள் வானத்தைப் பார்த்தபடியே ஆராய்ச்சி செய்தான். "பரந்த வான மண்டலத்தின் நடுவே நாம் வாழும் இப் பூமண்டலம் உள்ளது. நம்மை நாள் தவருமல் சுற்றி வருகிறது சூரியன். சந்திரனும் அப்படித்தான் வட்டமிடுகிறது. கோள்களும் (கிரகங்களும்) அவ்வாறே. விண்மீன்களும் கோள்களைப் பின்பற்றுகின்றன."

டாலமியினுடைய இச்சித்தாந்தம்தான் வான அறிவியலில் தோன்றிய முதல் சித்தாந்தமாகும்.

டாலமிக்குப் பின் வான அறிவியல் வளர்ச்சியில் பதினைந்தாவது நூற்றுண்டு வரையில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி இல்லை. கி. பி. 1473-ல் தோன்றிய நிகோலஸ் கோப்பர் நீகஸ் தான் ஞாயிறைச் சுற்றி கோள்கள் செல்லுகின்றன என்ற உண்மையை முதன்முதலில் ஊகித்துக் கூறியவர். இது டாலமி கூறியதோடு மாறுபட்டிருந்தபோதிலும், கோப்பர் நீகஸினுடைய இச்சித்தாந்தமே உண்மையாக இருந்தது.

அதன் பின் 16-ம் நூற்றுண்டில் தோன்றிய டைகோப்ராகி என்ற டச்சுக்காரர்தான், வான ஆராய்ச்சியில் ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்கினர். அவருக்கு முன் வாழ்ந்த வான நூல் அறிஞர்கள், ஊகித்துச் சொன்னவற்றை இவர் சோதனை செய்து (observation), கணித முறையில் ஆராய்ந்து பார்த்து வானத்தைப் பற்றிய நுண்ணிய உண்மைகளை யெல்லாங்கூடக் கண்டு சொன்னுர். இவர் "சூரியனைக் கோள்கள் வட்டமிடுகின்றன என்பது சரியல்ல" வென்றும், "கோள்கள் சூரியனை நீள வட்ட வடிவிலே சுற்றி வருகின்றன" என்றும் கூறினர்.

பின் 17-ம் நூற்றுண்டில் வாழ்ந்த கலிலியோதான் முதன் முதலில் வான மண்டலத்தைக் காணுவதற்கேற்ற தொலை நோக்கியைக் (Telescope) கண்டு

பிடித்தார். "அவன் ஓர் மாயா வாதி" என்றனர் மதத்தில் மயங்கிய மக்கள். "அவன் ஓர் கண்ணாடியைக் கொண்டு செப்படி வித்தை செய்கிறான்" என்று சொல்லிச் சிரித்தனர், சிங்காரிகளின் சிரிப்பில் சொக்கிக் கிடந்த சீமான்களும், குருமார்களும். மக்களும், மதக் குருக்களும் மிரட்டுவது கண்டு அவர் மருளவில்லை. இரவில் நீண்ட நேரம் வரையில் விழித்திருந்து, தான் கண்டு பிடித்த தொலைநோக்கி வழியே, வான மண்டலத்தை நோக்கினார். இரவில் கண்டு குறிப்பெடுத்ததைப் பகலெல்லாம் கணக்குப் போட்டுச் சரி பார்த்தார். அவர் கண்ட தொலை நோக்கி சந்திர மண்டலத்தின் தூரத்தை மூன்றில் ஒரு பங்காகக் குறைத்துக் காட்டிற்று. கண்ணைப் பறிக்கும் ஒளி வீசும் கதிரவனிடம் சில கறுப்புக் கறைகள் இருப்பதைக் கூட அவர் தான் முதலில் கண்டார். அதுவரை யாரும் கண்டறியா விண்மீன்களையும் கண்டார், தன் தொலைநோக்கி வழியே. 'நெப்டியூன்' என்ற புதிய கோளையும் கண்டார்.

எதையும் ஆராய்ந்து முடிவு காணும் வரையில் அவரது மூளை வானமண்டலத்திலேயே சஞ்சரித்துக் கொண்டிருந்தது. ஆம்! அவர் பல புது உண்மைகளைக் கண்டார். ஆனால் அவர் கண்டு கூறியதை மக்கள் நம்பவில்லை. மக்களுக்கு நம்பித் தானே வழக்கம். ஆராய்ந்து அறிவதேது? மதக் குருக்கள் அவர் புகன்றதை மமதையுடன் மறுத்தனர். "தேவ மறையை மறைக்கச் செய்யும் சூது" என்று திருவாய் மலர்ந்தருளினார் போப் அர்பன். சூரியனின் கறையைக் கண்ட கலிலியோவின் வாழ்வில் துன்பக் கறை படர்ந்தது. அவர் கூன் விழுந்து நிற்க முடியாது தள்ளாடிய நேரத்தில் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு "உலகம் அசையவில்லை" என்று கூறும்படிக் கட்டாயப்படுத்தப்பட்டதோடு, அவர் தமது இல்லத்திலேயே சிறை வைக்கப்பட்டார் என்றால் அவர் பட்ட துன்பத்தையும் கூற வேண்டுமோ?

ஆனால் அன்று அவர் கூறிய போது மக்கள் நம்பவில்லை என்பதோடு, 'கர்த்தாவின் மகத்துவத்தை மறைக்கும் மடையன்,' "ஏசு தோன்றிய இப்புண்ணிய பூவுலகம், நாளும் தோன்றி மறையும் சூரியனைச் சுற்றி வருகிறது என்று இழித்துக் கூறும், கடையன்" என்றெல்லாம் தூற்றினர்.

நம் நாட்டவரோ கலிலியோவை, அவர் கருத்தை இன்றுங்கூட மறுக்கவில்லை. தெரிந்தால் தானே மறுக்க! நம் நாட்டவர்க்கு கலிலீயோவா தெரியும்? காலட்சேபம் தானே தெரியும்! இரவு, பகல், பூமி தன்னைத் தானே சுற்றிக் கொள்வதால் ஏற்படுவது என்பது தெரியாது நம்மவருக்கு. ஆனால் மேரு மலையைச் சூரியன் சுற்றி வருவதால் உண்டாகும் நிழலே இரவு பகல் என்று பேசுவார்கள். தட்பவெட்ப மாற்றம் சூரியனைப் பூமி

ஒரு நீண்ட வட்டத்தில் அச்சு சாய்ந்து சுற்றுவதால் உண்டாகிறது என்பதை அறியார்கள். சூரிய பகவானின் கோபமும், வருண பகவானின் கோபமுமே என்று பகர்வார்கள். பூமியின் இழுப்புச் சக்தி தெரியாது, சொன்னாலும் புரியாது. பூமி மஹாவிஷ்ணுவின் மனைவியாக இருந்த செய்தி, தெரியும். ஒன்பதாவது கோளுக்கு மேல், பத்தாவது கோளான 'புளுடோ' கண்டு பிடிக்கப்பட்டதை நம்பமாட்டார்கள். மேலேழுலகமும் கீழேழுலகமும் அவர்கள் போய் வந்த இடம்போல் பேசுவார்கள்.

கலிலியோ இறந்த 1642ம் ஆண்டில் பிறந்த அறிவியல் நிபுணன் நியூடன் கண்டு பிடித்த நில இழுப்புச் சக்தி (Gravitational Force) வான மண்டல ஆராய்ச்சிக்கே ஒரு பெருந் துணையாக அமைந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் வளர்ந்த வான இயலின் வளர்ச்சி அளவிடற்கரிது. அமைதியாகத் தன்னைத்தானே சுற்றிக்கொண்டிருந்த சூரியனிலிருந்து தெறித்தவைதாம் இப்பூமி முதலியபத்துக்கோள்களும் என்பதைக் கண்டுசொல்லினர். சூரியனைச் சுற்றிவரும் இக் கோள்களின் நிலை, மாற்றம், வேகம், சூரியனைச் சுற்றி வர ஆகும் நாட்கள் ஆகியவற்றைத் தெளிவாகக் கூறினர். சூரியனின் விட்டம் 865000 மைல்கள். அது பூமியைப்போல் 1,300,000,மடங்கு அளவு பெரியது. பூமியிலிருந்து 93 000 000 மைல்கள் தூரத்திலுள்ளது. அடுத்து சூரியனின் மிக அருகிலிருப்பது புதன் என்ற கோளாகும். விட்டம் 3,000 மைல்கள். சூரியனைச் சுற்றிவர ஆகும் நாட்கள் 88-தான். சூரியனிலிருந்து 43000.000 மைல்கள் தூரத்திலுள்ளது. பருமன் பூமியில் 17-ல் ஒரு பங்குதான். சுக்கிரன் (Venus) சூரியனிலிருந்து இரண்டாவது கிரகம். மிகவும் ஒளி யுடையது. பூமியிலிருந்து 2,300,000 மைல்கள் தூரத்திலுள்ளது. விட்டம் 7,700 மைல்கள். அடுத்து நாம் வாழும் பூமி உள்ளது. இது மூன்றாவது கோள். உருவத்தில் ஐந்தாவது. ஒரு சந்திரனை உடையது. சூரியனிலிருந்து தூரம் 92,963,000 மைல்கள். தன்னைத்தானே ஒரு செகண்டுக்கு 17 மைல்கள் வீதம் சுற்றிக் கொள்கிறது. சூரியனைச் சுற்றிவர நாட்கள் 365. செவ்வாய் Mars) நான்காவது கோள். பூமியின் மிக அருகிலுள்ளது. 2 ஆண்டுகள் சூரியனைச் சுற்றி வர ஆகின்றன. வியாழன் (Jupitor) ஐந்தாவது கிரகம். மிகப் பெரிய உருவமுடைய கிரகம் இதுதான். ஆனால் சூரியன் உருவில் 1000-ல் ஒரு பங்குதான். ஏழு சந்திரன்களையுடையது. ஆறாவது கோள் சனி (Saturn). சூரியனைச் சுற்றி வர 29½ ஆண்டுகள் ஆகின்றன. அதைச் சுற்றி வந்த சந்திரன் துகள்களாகத் தெறித்து விட்டது. அத் துகள்கள் வளையல்போன்று அக்கோளைச் சுற்றி வருகின்றன. அடுத்தது யுரேனஸ். கதிரவனிலிருந்து தூரம் 1,750 000,000 மைல்

கள் அதன் விட்டம் 33000 மைல்கள். 84 வருடங்கள் சூரியனைச் சுற்றிவர ஆகின்றன. நெப்ட்யூன் எட்டாவது கிரகம். நம் கண்ணிற்குத் தென்படாதது. கணித மூலம் கண்டு பிடிக்கப்பட்டது. ஒரு சந்திரனை உடையது. பத்தாவது கோள் ப்ளூடோ.

மேலும், சூரியனையே கூடத் தெளிவாகப் படம் (Photo) பிடித்தனர். அவர்களது தொலை நோக்கி கற்பனைக்கும் எட்டாத தூரத்திலிருந்த புளூடோ என்ற கோளையே கண்டு பிடித்தது. அது மாத்திரமா? தொலை நோக்கி கண்டு பிடிக்காததையெல்லாம் அவர்களின் கணிதநூல் காட்டிற்று. இந்த ஆண்டு, இந்நாள், இந்த நாழிகை வால் மீன் தோன்றும் என்று கணக்கிட்டுக் கூறினார்கள். தோன்றிற்று! ஒரு விண் மீனிலிருந்து மற்றொரு விண் மீனிற்கு உள்ள தூரத்தை, அதன் சுற்றளவை, ஏன்? அதன் எடையையும் கூடக் கண்டு பிடிக்கிறார்கள், இங்கு இருந்தபடியே.

ஞாயிறை விடப் பன்மடங்கு பெரியவையான விண் மீன்களையும், அவைகளைச் சூழ்ந்து சூரியனைச் சுற்றிலும் இருப்பது போன்றே கோள்கள் உள்ளன என்றும் கண்டுள்ளனர். சூரிய மண்டலமே 'விகா' என்ற ஒரு பெரு விண் மீனை நோக்கி வினாடிக்கு 800 மைல் வேகத்தில் சென்று கொண்டுள்ளதெனக் கணக்கிட்டுள்ளனர்.

இன்று வானியல் ஆராய்ச்சி வெகு தூரத்திற்கு வளர்ந்து விட்டது. வான மண்டலத்தில் இன்னும் உருவடையாமல் ஆவி தோற்றத்திலேயே உள்ள விண் மீன்களின் நிலையையும் கூறிடுகின்றனர். ஒளிக் கதிர் நம்மை வந்தடைய நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான, கோடிக் கணக்கான ஆண்டுகள் செல்லும், விண் மீன்களைப் பற்றிய ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளனர் இன்று. இது மட்டுமல்ல, பல்லாயிரக் கணக்கான மைல் தூரத்திலுள்ள, சந்திர மண்டலத்திற்கு முதலில் செல்லலாமா, அன்றிச் செவ்வாய் மண்டலத்திற்குப் போகலாமா எனத் திட்டமிட்டுக் கொண்டுள்ளனர் இன்றைய விஞ்ஞானிகள். மனிதன் விஞ்ஞானத்தின் உதவியால் வான மண்டலத்தை நெருங்கிய வண்ணமுள்ளான்.

அறிவியல் வளர்ந்துகொண்டேயிருக்கிறது. அதன் முடிவுகளெல்லாம் முடிந்த முடிவுகளல்ல. முடிந்த முடிவினை மேலும் மேலும் நெருங்கிக் கொண்டே இருப்பவைதான் அம்முடிவுகள்.

—சர். ஜேம்ஸ் ஜீன்ஸ்

இரா. குழுஉக்கலைஞர்

மந்த நடந்த மாலைக்காலம்

●

கார்நிறக் கடலை ஆடையாக அணிந்துள்ள உலகமாகிய மங்கை இப்போது உள்ளங் கலங்குகின்றாள். அவளுடைய கண்களினின்றும் கண்ணீர் சொரிவது போல மலர்கள் தேனைச் சொரிகின்றன. அவள் உடல் முழுவதும் நடுங்குகின்றது! நடுங்குகின்ற உடலில் தோன்றும் வியர்வை நீர் போலப் பனித்துளிகள் சிதறுகின்றன. அச்சமும் துன்பமுங் கலப்பதால் அவள் முகம் கறுப்பதைப் போலத் திக்குகளும் பசுமை கொண்டன. இவ்வாறு அம்மகள் நடுங்குவதற்குக் காரணந்தான் என்ன! அந்தோ! மிகவும் துன்பப்பட வேண்டிய செய்திதான். அவளின் காதலனை இப்போது காணவில்லையாம். கடலில் மூழ்கிவிட்டான் அவன்! அக்காதலனுக்கு இணையானவர்கள் உலகிலேயே கிடையாது. செவ்விய உடல் பெற்றவன். விரிந்த தன் கதிர்களால் உலக முழுவதும் ஆளுபவன். ஒப்பிலாத ஒற்றை உருளை பூட்டிய தேரை உடையவன். அழகிய "ஞாயிறு" என்னும் பெயரை உடையவன். இத்தன்மையான வீரனைக் காதலனாகப் பெற்ற காதலி ஏங்குவது இயற்கைதானே! அவனாவது காணாமற் போகட்டும். சிறிது நமக்குக் காவலாக உள்ள திங்களஞ் செல்வனும் சென்ற இடம் தெரியவில்லையே! அவனும் எந்த இடத்தில் இருக்கின்றானோ! என மயங்குகின்றாள் அந்நில மடந்தை.

"விரிகதிர் பரப்பி உலகமுழுது ஆண்ட
ஒருதனித் திகிரி உரவோன் காணேன்
அங்கண் வானத்து அணிநிலா விரிக்கும்
திங்களஞ் செல்வன் யாண்டுஉளன் கொல்எனத்
திசைமுகம் பசந்து செம்மலர்க் கண்கள்
முழுநீர் வார முழுமெயும் பனித்துத்
திரைநீர் ஆடை இருநில மடந்தை
அரைசுகெடுத்து அலம்வரும் அல்லல்காலை"

[திகிரி: உருளை. உரவோன்: வலிமையுடையவன். அணி நிலா: அழகிய நிலவின் ஒளி. யாண்டு உளன்கொல்லோ: எவ்விடத்தில் இருக்கின்றானோ? பசந்து: பசுமை நிறம் பெற்று. வார: சொரிய. பனித்து: நடுங்கி. திரைநீர்: கடல். அரசு கெடுத்து: கணவனைப் பிரிந்து. அலம்வரும்: வருந்தும். அல்லல்: துன்பம்.]

ஓகோ! இப்போதுதான் விளங்குகின்றது. பகல் போய் மாலைக்காலம் வந்ததைத்தான் புலவர் இவ்வாறு புனைந்து கூறுகின்றார். மேலே என்ன கூறுகின்றாரோ பார்ப்போம். மாலைக் காலம் வருகின்றது, மந்த நடை நடந்து.

மங்கையர் மணி விளக்குகளை வரிசையாக ஏற்றி மாடங்களில் வைத்து மலர்களைக் கூப்பி வணங்குகின்றனர். வண்டுகள் மலர்ந்த முல்லைப் பூக்களில் வாய்வைத்து மயக்கத்துடன் ஊதித்திரிகின்றன. இடையர்கள் இனிமையான வேய்ங்குழலில் இசையை எழுப்பிக் கொண்டிருக்கின்றனர். அரும்புகள் மணத்துடன் அலருகின்றன. அம் மணத்தைத் தென்றல் காற்றானது தெருக்கள் தோறும் சிதறும்படியாகத் தேனுடன் தெளிக்கின்றது. இக்காட்சியில் நாம் உள்ளத்தைப் பறிகொடுக்கின்றோம்.

> "குழல்வளர் முல்லையில் கோவலர் தம்மொடு
> மழலைத் தும்பி வாய்வைத்து ஊத,
> அறுகால் குறும்பு எறிந்து அரும்புபொதி வாசம்
> சிறுகால் செல்வன் மறுகில் தூற்ற
> எல்வளை மகளிர் மணிவிளக்கு எடுப்ப
> மல்லல் மூதூர் மாலைவந்து இறுத்தென."

[குழல்: கூந்தல். மழலை: பொருள் தெரியாத ஓசை. அறுகால்: வண்டு. குறும்பு எறிந்து: குறும்பர்களை ஓட்டி. பொதி: மறைந்துள்ள. கால்: காற்று. தூற்ற: சிதற. எல்வளை: ஒளி வீசும் வளையல். எடுப்ப: ஏற்ற. மல்லல்: வளப்பம். இறுத்தென: தங்கியதாக]

மாலைவந்தது என்னவோ நல்லதுதான். ஆனால், அதன் வரவு எல்லோருக்கும் இன்பத்தைக் கொடுக்கவில்லையாம். சிலர் துன்பமும் சிலர் இன்பமும் அடையும்படிச் செய்த இம்மாலைக் காலத்திற்கு ஓர் உவமை கூறுகின்றார் புலவர்.

பெரிய அரசன் ஒருவன் நாட்டை ஆண்டு வருகின்றான். எல்லோரும் அவனுக்குக் கீழ்ப்படிந்து அடங்கித் திறை செலுத்தி வருகின்றார்கள். அவ்வாறே திறை செலுத்தி வரும் மக்கள் கடமையைத் தவறாமல் செய்து விட்டோம் என்று மகிழ்ச்சியடைகின்றார்கள். செலுத்த முடியாத குடிகள் சிலர் துன்பம்

பட்டுக்கொண்டே யிருக்கின்றார்கள். இன்பத்தை அடுத்து துன்பம் எங்கும் உண்டல்லவா! அதைப்போல வஞ்சனை நிரம்பிய சிற்றரசர் சிலர் பேரரசர் இல்லாத இடம் பார்த்துத் திறை செலுத்த முடியாமல் தேம்பி நிற்கும் கீழ் மக்கள் சிலரை யும் சேர்த்துக்கொண்டு அந்த அரசர்களுக்கு உரிமையான இடங்களைக் கைப்பற்றிக் கொள்கின்றார்கள். அப்போது எங்கே தங்கள் உயிருக்கு இடையூறு நேருமோ என்று, முன்பு திறை செலுத்திய மக்கள் மயங்குகின்றார்கள்.

"வலம்படு தானை மன்னர் இல்வழிப்
புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின்"

[வலம்படுதானை: வெற்றி பெறும் சேனை. இல்வழி: இல் லாதவிடத்து. புலம்பட: இடம் கெடும்படி. விருந்தின் மன்ன ரின்: புது மன்னரைப்போல]

இந்த நிகழ்ச்சியை மாலைக் காலத்திற்கும் பொருத்திப் பார்க்க வேண்டும். பெரிய அரசன் இல்லாத காலம் பார்த்து அரசைக் கைப்பற்றிய சிற்றரசர் போன்று ஞாயிறு இல்லாத காலம் பார்த்து அது மறைந்தவுடன் மாலைக்காலம் வருகின்ற தாம். வந்து உலகத்தைக் கைப்பற்றிக் கொள்ளுகின்றதாம். கணவனைப் பிரிந்த இளமங்கையர் முன்பு திறை கொடுத்தவர்கள் மயங்குவதைப் போலக் கண் கலங்குகின்றார்களாம்! காதல் நோய் பொறுக்க முடியாத காரணத்தால்.

கணவர்களைக் கூடியுள்ள பெண்கள் மட்டற்ற மகிழ்ச்சியில் மிதக்கின்றார்களாம்! இவ்விரண்டையும் ஒப்புமைப் படுத்திக் கூறும் அழகு பாராட்டத்தக்கதாக இருக்கின்றதல்லவா!

"தாழ்துணை துறந்தோர் தனித்துயர் எய்தக்
காதலர்ப் புணர்ந்தோர் களிமகிழ்வு எய்த"

[தாழ்துணை: தங்கிய காதலர்களை. துறந்தோர்; நீங்கிய வர்கள். துயர்: துன்பம்.]

என்ற அடிகளில்தான் இன்பமும் துன்பமும் எவ்வாறு காட்சி யளிக்கின்றன ஒரே யிடத்தில்!

திங்களஞ் செல்வனைக் காணாது உலகமாகிய பெண் முன்பு வருந்திக் கொண்டிருந்தாள் அல்லவா! இப்போது அதைப் போக்குவதற்காக அவன் அழகிய வானத்தில் தோன்றுகின்றான். ஒருகாரணமும் இல்லாமல் அவன் தோன்றி விட்டான் என்று சொன்னால் அதில் சிறப்பு ஒன்றும் இல்லையல்லவா! அல்லா மலும் புலவர் கூறிய கதை முடியாமல் அன்றே நின்றுவிடும். எனவே விட்ட குறைக்கதையையும் முடிக்க நினைத்து அதி லிருந்து தொடருகின்றார் அவர்.

பெரிய அரசன் இல்லாத இடம் பார்த்து அவன் நாட்டைத் தனக்காக்கிக் கொண்ட சிற்றரசனைப்போல மாலைக்காலம் இப்போது ஆட்சி செய்கின்றது. அந்தச் சிற்றரசனைத் துரத்தி நாட்டைக் கைப்பற்றும் வேறு அரசனைப் போலத் திங்கள் மாலைக் காலத்தை ஓட்டுகின்றது. அந்தி வானத்தில் வெண் பிறை தோன்றியவுடன், மாலைக் காலமும் மெள்ள மெள்ள அகலுகின்றது.

இது ஒன்றுமில்லாத வெறும் மாலைக் காலச் சிறப்பாக மட்டும் இருக்கக்கூடாது என்பது புலவரின் எண்ணம். ஆதலின் இந்த இடத்திலும் ஓர் மன்னனின் சிறப்பையும் சேர்த்துக் கூறுகின்றார்.

தென்னாட்டை ஆளும் பாண்டியர்கள் எவ்வளவோ போர்களில் வெற்றி பெற்றவர்கள். போர் என்பதே அவர்களுக்கு ஓர் வீர விளையாட்டு. வயதில் மிகவும் இளையவர்களாயிருந்த காலத்திலும், வலிமை மிகுந்த பகை அரசர்களை யெல்லாம் எவ்வளவோ எளிதாக வென்று வாகை பூண்டவர்கள். தலையாலங் கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன் இளமை மாறாத குழந்தைப் பருவத்திலேயே ஏழு மன்னர்களைப் புறமுதுகிட்டு ஓடும்படி வென்றான் என்பது உலகம் அறிந்ததுதானே. ஆகவே அவர்களுடைய குடியின் முதல்வனாகிய திங்களும் தான் இளம்பிறையாக இருந்தாலும் வலிமை நிறைந்த மாலைக் காலத்தை வென்று விளங்குகின்றது என முடிக்கும் புலவரின் கற்பனையை எவ்வாறு வியப்பது!

" இளையர் ஆயினும் பகைஅரசு கடியும்
செருமாண் தென்னர் குலமுதல் ஆகலின்
அந்தி வானத்தின் வெண்பிறை தோன்றிப்
புன்கண் மாலைக் குறும்புஎறிந்து ஓட்டி
பான்மையில் திரியாது பாற்கதிர் பரப்பி
மீன்அரசு ஆண்ட வெள்ளி விளக்கத்து."

[கடியும்: வென்று ஓட்டுகின்ற. செருமாண் தென்னர்: போரில் சிறந்த பாண்டியர். குலமுதல்: குலத்தின் முதல்வன். எறிந்து: அழித்து. பான்மையில் திரியாது: நெறிதவறாமல். மீன் அரசு: விண்மீன்களை ஆளும் அரசு. விளக்கத்து: விளங்கும் ஒளியில்.]

திங்களின் பால்போன்ற கதிர்கள் எங்கும் பரவுகின்றன. விண்மீன்கள் கண்சிமிட்டித் தங்கள் அரசனை வரவேற்பது போல் மின்னுகின்றன. மீன் அரசு செலுத்துகின்ற அத்திங்களஞ் செல்வனின் நடுவு நிலைமை தவறாத ஆளுகையில் காவிரிப்பூம்பட்டினம் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்றது. இவ்வேளையில் அங்கு நடக்கும் சில காட்சிகளைக் காண்போம்.

திரைக் காட்சி

★ ஞான சௌந்தரி ★

திரைப்பட வுலகின் ஒரு நல் விருந்தாகச் 'சிட்டாடல் பிலிம் கார்ப்பரேஷன் தயாரித்து வெளியிட்டுள்ள 'ஞான சௌந்தரி' தமிழகத்தின் பல பகுதிகளிலும், சென்னை பாரகனிலும், திரையிடப்பட்டு வருகிறது

இதற்கு முன்னும், 'ஞான சௌந்தரியை' நாடக மேடைகளிலும், படக் காட்சியிலும் பலரும் கண்டுள்ள போதிலும், இப்படம் காண்போர் மனதைக் கவரத் தவறவில்லை. இது, பழைய போக்கிலே அமைந்துள்ள கதையேயானாலும், படமெடுத்துள்ள முறை பாராட்டக் கூடியதாகவே இருக்கிறது.

'பொறாமை' என்ற நச்சு ஊற்றிலிருந்து தோன்றும் சூது, சூழ்ச்சி, சதி வஞ்சகம், கொலை ஆகிய கொடிய எண்ணங்கள் மனித வாழ்வை எப்படி எப்படிப் பாழாக்குகின்றன என்பதை, இக் கதை இரக்க உணர்ச்சியோடு கலந்து உள்ளத்தில் பதியச் செய்வதோடு, துன்பத்திலேயே தொடர்ந்து இன்பத்திலே முடியும் இறுதிக் கட்டம் வரையில், காண்பவரை அதிலேயே ஆழச் செய்துவிடுகிறது. ஞான சௌந்தரி மறுபடியும் காட்டிலே தவிக்க நேரிடும்போது—அளவு மீறும் துக்கத்தை அடக்கிக் கொள்ள—கன்னி மரியாளைத் தவிர்த்து வேறு யாரைக் கொண்டும் உதவியளிக்க முடியாத நிலையில் அவ்வாறு கற்பிக்கப்படுகிறது

ஞான சௌந்தரியாக நடித்துள்ள திருமதி. எம். வி. ராஜம்மாவின் நடிப்பு, முதல்தரமானது. திரு. T. R. மகாலிங்கமும் பிறரும் நன்றாகவே நடித்துள்ளனர். கவர்ச்சி மிக்க நடிப்பும், கண்கொள்ளாக் காட்சி அமைப்புக்களும், உணர்ச்சியூட்டும் வசனங்களும் உள்ளங் கவரும் பாடல்களும், விறுவிறுப்பான கட்டங்களும் ஒருங்கே பொருந்தியிருப்பது போற்றத் தக்கது.

இப்படத்தைத் தயார் செய்த திருவாளர்கள், எப். நாகூர், ஜோசப் தளியத் ஆகியோரின் டைரக்ஷன் திறன் மிக்கது. மேலும் வளரும் திறத்தது. படப்பிடிப்பும், ஒலிப்பதிவும் சிறப்புடையன. இப்படம் சிட்டாடல் கம்பெனியாரின், முதல் தரமான வெற்றி என்பதில் ஐயமில்லை.



உரைகல்

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

ஆசிரியர்: வித்வான். செ. சதாசிவம்.

தமிழ் நாட்டின் தலை சிறந்த கவிஞர்கள் மிகச் சிலருள் ஒருவராகிய கவிமணி தே. வி. அவர்களின் வாழ்க்கை உண்மைகளை அறிந்து கொள்வது தமிழர்களின் கடனாகும். எனவே, அக்கவிமணியின் வாழ்க்கை வரலாறும், கவிதைச் சிறப்பும் இசைப்புலமையும், தமிழ்த்தொண்டும், உள்ளப்பாங்கும் தோன்றித் திகழ, சிறந்த முறையில், தெளிந்த நடையில் திரு. வித்வான் செ. சதாசிவம் அவர்கள் இந்நூலை எழுதியுள்ளனர்.

கவிமணியின் கவிதைகள் கற்கண்டென இனிக்கும் தன்மையன. படிப்போரை அமைதி இன்பத்தில் ஆழ்த்துவன. புரட்சிப் பண் அவருடைய குரலில் ஒலிப்பதில்லை. எனவே அவரது வாழ்க்கையும் அமைதியின் இல்லமாகவே காட்சியளிக்கின்றது.

இந்நூலின் கண், இன்றியமையும் இடங்களில் வேண்டாத வடசொற்களைக் கையாண்டிருப்பது வருந்தத்தக்கது எனினும் இம்முயற்சி பாராட்டுக்குரியது. இந்நூலை வெளியிட்டுதவிய நகைச்சுவை அரசு. திரு. என். எஸ். கிருஷ்ணன் அவர்களையும் தமிழகம் பாராட்டுகின்றது. விலை ரூ. 2

கிடைக்குமிடம்: என்னெஸ்கே பிலிம்ஸ், 6. வெங்கட்ராமய்யர் தெரு, தியாகராய நகர், சென்னை.

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்

ஆசிரியர்: புலவர். குழந்தை

உயர் தனிச் செம்மொழி என்னும் சிறப்புக்குறிய நந் தமிழ் 'எழுத்து மிகுதியுடையது' என்னும் குறைபாட்டினால், அறிவியல் கருவிகளின் முழுப்பயன் கொண்டு ஆக்க முறுவது கடினமாவதால், தமிழ் வரிவடிவ எழுத்துக்களின் எண்ணிக்கையைத் தக்க ஆதாரங்களோடும் ஆராய்ச்சி முறையோடும், 131-ல் இருந்து 47 ஆகவும், 30-ஆகவும் குறைத்துக் காட்டியுள்ளார் இதன் ஆசிரியர். புதியவரிவடிவங்களைக் கண்டவுடன் வெறுப்புக் கொள்ளாமல், ஆழ்ந்து யோசித்தால், அவர் காட்டும் திருத்தங்களில் பெரும் பகுதியும் ஏற்புடைத்தாகவே காணப்படுகின்றது. தமிழ் எழுத்துச் சீர்திருத்தக் குழுவினர் இந்த நூலைப் பயன் படுத்திக் கொள்ள வேண்டுகிறோம்.

(விலை அணா 4.)

கிடைக்குமிடம்: வள்ளுவர் பதிப்பகம், பவானி, (வழி) ஈரோடு.

போர்வாள்.

இயற்றியவர்: சி. பி. சிற்றரசு.

மனிதன் கருத்துப் போர் புரியாத நேரமே இல்லை. ஆனால் தமிழனே, பழமை என்னும் போதையில் மயங்கி, மூட நம்பிக்கை என்னும் விலங்கிடப்பட்டு, பழக்க வழக்கமென்னும் கோழைத்தனத்தால்

யின் வாங்கி, ஆரிய நயவஞ்சக வலையில் சிக்குண்டு, கருத்துப் போரே நிகழ்த்த முடியாத நிலையில், வாழ்க்கைப்போரில் தோற்ற வண்ணமுள்ளான்.

இந்நிலையை மாற்ற அறிவு வாளைக் கருத்துப் போரிலே சுழற்றச் செய்யவே—'போர்வாள்' உறை கழிக்கப்பட்டுள்ளது. மேடைப் பேச்சிலும், ஏட்டிலும் மட்டுமே நடமாடிய புரட்சிக் கருத்துக்களை—நாடகமேடையில் வலம் வரச் செய்த பெருமைக்குரிய அறிஞர் அண்ணாதுரை அவர்களைப் பின்பற்றி மேலும் மேலும் வெற்றிகாண, நண்பர். சி. பி. சிற்றரசு அவர்கள் நாடகமேடையில் 'போர்வாளை' நடித்துக் காட்டியதோடு, அப்போர்வாளைப் பிறர் கையிலும் தந்துள்ளது பாராட்டுக்குரியது. திரு. பொன். இராமலிங்கம் அவர்கள் வெளியிட்டுதவியதற்கும் நமது நன்றி. விலை ரூபா 1–4–0.

கிடைக்குமிடம்: அருமைமணி பதிப்பகம், புதுச்சேரி.

கொய்யாக் காதல்

நாரா. நாச்சியப்பன்.

கற்கண்டுத் தமிழில் கனிரசக் கவிதை வடிவில், காதல் சுவையும், காவியச்சுவையும், நகைச் சுவையும், இரக்கச் சுவையும் நிரம்ப, 'கொய்யாக் காதல்' மலர்ந்துள்ளது. விரு விருப்பான கதையும், விதவிதமான பாவகையும், வேறு வேறான உவமைகளும், சல சலவென்றோடும் தமிழ் நடையும், படிப்போரது உள்ளத்தைக் கொள்ளை கொள்ளுகின்றன. 'இது என் செயல்' என்றுக் கூறிக் கொள்வதிலே பெருமையடைய—இதன் ஆசிரியருக்கு எவ்விதத்திலும் நியாயமுண்டு. திரு. நாரா. நாச்சியப்பன் அவர்கள் செயலின் சிறப்புக்கண்டு தமிழகமே பெருமையடைகின்றது. விலை அணா 12.

கிடைக்குமிடம்: 'ஒளி நிலையம்' பலவான் குடி, (வழி) காரைக்குடி.

தனித் தமிழ்க் கிளர்ச்சி

வித்வான்: சுந்தர–சண்முகனார்.

தமிழ்மொழி, கலை, நாகரீகப் பண்பாடுகளும், தமிழர் பெருவாழ்வும், புகழும், சீரழிந்த விதத்தையும், சீர்பெறும் வகையையும், அழகிய இனிய எளிய எழுச்சியூட்டும் அம்மானைப் பாடல்களாக இயற்றியுள்ளார் புலவர், திரு. சுந்தர சண்முகனார் அவர்கள். வீட்டிற்கு வீடுள்ள பெண்களும் வீறு கொண்டாலன்றி, ஒரு நாடு முன்னேறுவது கடினம். அதற்கேற்ப, கேள்வியும் பதிலுமாக அமைத்திருப்பது பாடிப் பாடி மகிழ்ந்து எழுச்சி யுறவும், தெளிவு பெறவும் துணையாகிறது, தமிழ்ப் பெண்கள் யாவரும் மனைதொறும் படித்துப் பாடி மகிழ வேண்டியதாகும். விலை அணா 5.

கிடைக்குமிடம்: பைந்தமிழ்ப் பதிப்பகம், 61. B. வைசியர் தெரு, புதுவை.

பிள்ளையோ பிள்ளை

ஆசிரியர்: மு. கருணாநிதி

வாழ்விலே வளம்பல பெற்றவராயினும், வகை கெட்ட முறையில் பிள்ளைப் பேறு பெற அலையும் காட்சியும், இயற்கை உணர்ச்சிக்காளாகி, கைபிடித்த காதகன் கைவிட்ட காரணத்தால், கைப்பிள்ளையுடன் கதிகலங்கி ஏங்கித் தவிக்கும் ஏழை மகளின் பரிதாபக் காட்சியும் வரையப்பட்டு—படிப்பவரின் சிந்தனையைக் கிளறுவதோடு, தோழர். மு. கருணாநிதியின், உணர்ச்சி ஊட்டி அடுக்கி வரும் மிடுக்குநடை, புத்தம் புதுக்கருத்துக்களை உருவாக்

கத் தவறவில்லை. 'பிள்ளையோ பிள்ளை' ஆம், இது ஒரு புதுச் சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் குரல் என்பதில் ஐயமில்லை. விலை அணா 6.

கிடைக்குமிடம்: "விந்தியம்" பதிப்பகம், திருவாரூர்.

பகுத்தறிவியக்கத்தின் பழமை

ஜீவபந்து: T. S. ஸ்ரீபால்

திராவிட நாகரிகக் கோட்பாடுகளை—சமணக் கொள்கைகளை என்பதையும், எவரையும், எவரும் எக்காலத்தும் கண்மூடிப் பின்பற்றும் மடமை ஒழிய வேண்டிப் பகுத்தறிவு இயக்கம் பழங்காலந்தொட்டே நிலவி வருகிறது என்பதையும் தக்க சான்றுகளுடன் விளக்கியுள்ளார் இதன் ஆசிரியர் திரு. ஸ்ரீபால் அவர்களின் தொண்டு பாராட்டுக்குரியதாகும்.

கிடைக்குமிடம்: மாவீர [illegible] சங்கம், 2/2 பெரிய நெய்யக்காரன் தெரு, சென்னை.

திருக்குறளும் மனுதர்மமும்

பெரியார்: ஈ. வெ. ரா.

மயிலை திருவள்ளுவர் கழகச் சார்பில் வள்ளுவரது நூலினது சிறப்புக் குறித்தும், திராவிட ஆரியக் கருத்துக்களின் முரண்பாட்டை விளக்கியும், உலகப் பொது நெறியாகிய குறளை ஒவ்வொருவரும் கற்க வேண்டியதை வற்புறுத்தியும், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் நிகழ்த்திய விரிவுரையே இந்நூல். பெரியார் அவர்களே—குறள் குறித்து இன்னும் எவ்வளவு விரிவுரைகள் நிகழ்த்தினும் தருமெனில், இந்நூலைப் படிப்பதின் அவசியத்தையும் கூற வேண்டுமோ? விலை அணா 4.

கிடைக்குமிடம்: கலைப்பதிப்பகம், 14, மலையப்பன் தெரு, சென்னை-1.

இல்லப்பெயர் அகர வரிசை

தமிழர் தம் இல்லங்கட்கு வேற்றுமொழிப்பெயர் இட்டு வழங்கும் இழிமுறையை நீக்கித் தமிழ்ப் பெயர் இட்டு வழங்கத் துணையாக இந்நூல் வெளிவந்துள்ளது. தமிழர் இந்நூற் பயனைச் செயலிற் காண்பார்களாக. விலை அணா 3.

கிடைக்குமிடம்: தி. தெ. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி & சென்னை.

சூறாவளி

(மாதம் மும்முறை)

ஆசிரியர்: கபிலன்

திராவிடர்களின் இழிவு நீங்கவும், திராவிடநாடு விடுதலை எய்தவும் பாடுபடும் தீவிர அரசியல் வெளியீடு. விலை அணா 0-1-3.

வெளியிடுமிடம்: 'சூறாவளி' திருமலைராயன் பட்டினம், காரைக்கால்.

[குறிப்பு:—மதிப்புரைக்கு அனுப்புவோர் இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்.]

சென்னை பாரகன் டாக்கியிலும், பெரம்பூர் சரஸ்வதி தியேட்டரிலும், இன்னும் தமிழ் நாட்டின் பல நகரங்களிலும் வெற்றிகரமாய் நடைபெறுகிறது.

Edited and Published by K. Anbazhagan M.A., at 10, Vellala St., Madras-7. Printed by S. Kalappan at Oriental Printing Works, 5, Sunkurama Chetty St, Madras - 1.